Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, OCTOBER 29, 2021

வெள்ளிக்கிழமை ஒக்டோபர் 29, 2021 | ஒளி: 07 கதிர் 139 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## மின்னல் தாக்கி சிறுவன் பலி



■ நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு - துணுக்காய், தேராங்கண்டல் பகுதியில், செவ்வாய்க்கிழமை (26) மாலை, 14 வயது சிறுவன், மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார்.

தேராங்கண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில், தரம் 9இல் கல்விப் பயின்ற சசிக்குமார் ஆதவன் என்ற சிறுவனே, இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

தொடர்ச்சி P2

ஞானசார தேரரின் நியமனம்

# துருவப்படுத்தலை அதிகரிக்கும்



### நியமனத்தைக் கண்டித்து ரவூப் ஹக்கீம் அறிக்கை

ஒரே நாடு , ஒரே சட்டம் செயலணியின் தலைவராக ஞானசார தேரரின் நியமிக்கப்பட்டுள்ளமை, நாட்டில் இனங்களுகிடையிலான முறுகலையும் துருவப்படுத்தலையும் மேலும் அதிகரிக்கும் என எச்சரித்துள்ள ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் எம்.பியுமான ரவூப் ஹக்கீம், இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும், அல்லாஹ்வையும் பகிரங்கமாகவே நிந்தித்தவர் மட்டுமன்றி பொதுவாக பௌத்தம் தவிர்ந்த ஏனைய சமயங்கள் மீது பகிரங்கமாகத் தமது வெறுப்புணர்வை

தொடர்ச்சி P2



## ‘குழப்படி செய்வோருக்கே வகுப்பில் பொறுப்பு’

### ஞானசார நியமனத்துக்கு சந்திரசேன விளக்கம்

■ ஒலுமுதீன் கியாஸ், எஸ்.எல்.நௌபர்

வகுப்பில் குழப்படி செய்வோரிடமும் கெட்டிக்காரர்களிடமுமே அந்த வகுப்பின் பொறுப்பை ஒரு பாடசாலையின் அதிபரோ அல்லது ஆசிரியரோ, ஒப்படைப்பார்கள். அதேபோன்றுதான், ஞானசாரதேரரை புதிய செயலணிக்கு ஜனாதிபதி நியமித்திருக்கிறார் என காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## கால அவகாசத்தை கேட்டார் அருட்தந்தை சிறில் காமினி

காணொளி மாநாட்டில் வெளியிடப்பட்ட கருத்து தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்த அருட்தந்தை சிறில் காமினி, தமக்கு ஒரு வார கால அவகாசத்தை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## இரண்டு போகம் செய்தால் வெளியில் வர மாட்டார்கள்

■ ஜே.ஏ.ஜோர்ஜ்



இன்னும் இரண்டு மூன்று போக நெற்செய்கைக்கு பின்னர் விவசாயிகளை சேதன பசளை மூலமான விவசாய முறையில் இருந்து வெளியில் கொண்டுவர முடியாத நிலையொன்று உருவாகும் என, விவசாயத்துறை இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சீன உரக் கப்பலுக்கான தரகுப் பணத்தை கையளிக்குக

### அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார் வஜிர



சீன உரக் கப்பலால் மேலும் நெருக்கடியை சந்திக்காமல், இருக்க வேண்டுமாயின் அதற்காக பெற்றுக்கொண்ட தரகுப் பணத்தை மீண்டும் கையளிக்க வேண்டும் என, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## முல்லைத்தீவில் உறவுகள் கவனயீர்ப்புப் போராட்டம்

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால், முல்லைத்தீவில், நேற்று (28) காலை 10.15 மணிக்கு, கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

உறவுகள் தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தி வரும் முல்லைத்தீவு

தொடர்ச்சி P2

## விபத்தில் இளைஞன் பலி; வைத்தியர் கைது

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதி, காத்தான்குடியில் காரொன்றுடன் மோட்டர் சைக்கிள் மோதி, நேற்று (28) அதிகாலை 5.30 மணிக்கு விபத்துக்குள்ளானது.

இதில், மோட்டர் சைக்கிளை செலுத்தி சென்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் படுகாயமடைந்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2





## சீனாவையல்ல தரமற்ற உர கப்பலே புறக்கணிப்பு

■ ஜே.ஏ.ஜோர்ஜ்

சீனாவில் இருந்து சேதனை பசளையை ஏற்றி வந்த கப்பலில் இலங்கையின் கோரிக்கைக்கு அமைய தரத்துடனான சேதனை பசளை இல்லாமை காரணமாகவே அதனை திருப்பியனுப்ப தீர்மானித்ததாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## விவசாயிகளின் உரிமைகளை அரசியலமைப்பில் சேர்ப்பேன்

### எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ உறுதி



புதிய அரசியலமைப்பை உருவாக்கும் போது, ஜனாதிபதி அல்லது பிரதமரின் அதிகாரம் குறைந்து, கூடுவது தொடர்பிலேயே அவதானம்

தொடர்ச்சி P2



## தனங்கிளப்பு விபத்தில் அறுவர் படுகாயம்

■ எம்.றொசாந்த், செந்தூரன் பிரதீபன்

யாழ்ப்பாணம் -சாவகச்சேரி, தனங்கிளப்பு பகுதியில், நேற்று (28) காலை இடம்பெற்ற விபத்தில், 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி நோக்கி சென்று கொண்டிருந்த பட்டா ரக வாகனமும், யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த டிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதியே, இந்த விபத்து சம்பவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## 23 இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

■ செந்தூரன் பிரதீபன், எஸ். நிதர்ஷன்



இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 23 இந்திய மீனவர்களின்

தொடர்ச்சி P2



## கொழும்பு துறைமுக நகரில்...

கொழும்பு துறைமுக நகரத்தில் உள்ள புதிய ‘க்ரேட் அட்வென்ச்சர் ஏடிவி டிராக்’ பொதுமக்கள் பார்வைக்கு நேற்று (28) திறக்கப்பட்டது. அதிலொரு டிராக்கை, விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ செலுத்துகின்றார். சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் உடன் பயணிக்கின்றார்.



இந்திய துணைதூதரகத்தின் ஏற்பாட்டில்

## விசேட பூஜை வழிபாடு

■ செந்தூரன் பிரதீபன்

இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் நாவற்குழி திருவாசகர் அரண்மனையில், நேற்று (28), இந்திய துணைத்தூதுவர் தலைமையில் , விசேட பூஜை வழிபாடு ஒன்று நடைபெற்றது.

தொடர்ச்சி P2



## முதலாளிமார் பிரதிநிதிகளுக்கும் காங்கிரஸுக்கும் இடையே முரண்பாடு

முதலாளிமார் சம்மேளன பிரதிநிதிகளுக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகளுக்கும் இடையில் தேசிய தொழிலாளர் ஆலோசனை சபையில் வைத்து கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

அந்த சபை, தொழில் அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா, தலைமையில் தொழில் அமைச்சில் கூடியது. தொழில் அமைச்சின் அதிகாரிகள், தொழில் ஆணையாளர், முதலாளிமார்களின் பிரதிநிதிகள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் என நான்கு தரப்பினர் கலந்துகொண்டனர்.

இதுதொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த,

தொடர்ச்சி P2

## தபால் மூல மருந்து விநியோகம் நாளை முதல் இடைநிறுத்தம்

■ எம்.எஸ்.எம். ஹனீபா



கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக கிளினிக் நோயாளர்களுக்கு தபால் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களால் விநியோகிக்கப்பட்டு வந்த மருந்து பொதிகள், நாளை சனிக்கிழமை (30) முதல் இடைநிறுத்தப்படவுள்ளதாக, பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க அறிவித்துள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிவித்தலுக்கமைய,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## 'குழப்படி செய்வோருக்கே வகுப்பில் பொறுப்பு'

ஜனாதிபதி பௌத்த மதத்துக்கு உரியவர் என்றும், அதனால் ஏனைய மதங்களுக்கு அச்சுறுத்தலாகவும் இடையூறாகவும் இருப்பார் என்றும் சிறுபான்மையினர் மத்தியில் இருந்து வந்த தப்பான சிந்தனை தற்போது விலகி வர ஆரம்பித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், "வீட்டுக்கு உறுதி" என்ற தொனிப்பொருளில், கிண்ணியா பிரதேசத்தில், 89 பேருக்கு காணி உறுதிப்பத்திரம், கிண்ணியா பிரதேச செயலகத்தில் நேற்று (28) வழங்கிவைக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, காணி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "வீட்டுக்கு வீடு உறுதி வழங்கும் தேசிய திட்டத்தின் கீழ், திருகோணமலை மாவட்டத்தில் முதலாவதாக கிண்ணியா பிரதேசத்தில் வழங்கப்படுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

"இந்நாட்டிலுள்ள அனைத்து மக்களும் ஒரே நாட்டவர் என்ற அடிப்படையில், தனது தூரநோக்கு சிந்தனையை ஜனாதிபதி ஆரம்பித்திருக்கிறார்.

"அரச காணிகளில் குடியிருக்கும் அனைவருக்கும் காணி உறுதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டுமென ஜனாதிபதி என்னிடம் பணிப்புரை விடுத்திருக்கின்றார். அதற்காக சகல நடவடிக்கையையும் நான் எடுத்து வருகின்றேன்.

"இத்திட்டத்தின் கீழ், ஒரு இலட்சம் காணி உறுதிகள் வழங்கப்பட வேண்டும். எனினும், கொனோரா தாக்கம் காரணமாக அவற்றை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாது போனாலும், ஆகக்குறைந்தது 60 உறுதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்" என்றார்.

## கால அவகாசத்தை கேட்டார் அருட்தந்தை சிறில் காமினி

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட தொடர் தாக்குதல்கள் தொடர்பான விடயங்களை முன்னிலைப்படுத்தி அண்மையில் இடம்பெற்ற காணொளி கலந்துரையாடலின் போது வெளியிடப்பட்ட கருத்துக்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக, அருட்தந்தை சிறில் காமினி நேற்று (28) அழைக்கப்பட்டிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ குறிப்பிட்டார்.

எனினும், ஒரு வார கால அவகாசத்தை வழங்குமாறு அருட்தந்தை சாந்த குமார வெலிவிட்டவின் ஊடாக கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 21 தாக்குதல்கள் தொடர்பான இணையத்தள விவாதம் தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களம், கொழும்பு பிரதம நீதவான் முன்னிலையில் நேற்று முன்தினம் (27) அறிக்கை சமர்ப்பித்தது.

இந்தக் கலந்துரையாடலில் தாம் தொடர்பில் பொய்யான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளதாக அரச புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலி செய்த முறைப்பாட்டிற்கு ஏற்ப விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## சீனாவையல்ல தரமற்ற உர கப்பலே புறக்கணிப்பு

ஜனாதிபதி ஊடக மையத்தினால் நேற்று (28) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இணைய வழியிலான ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்று கருத்து வெளியிடுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

எனினும், இந்த விடயம் தொடர்பில் தவறான கருத்துகள் பரப்படுவதாக தெரிவித்த அவர், இந்த விடயத்தை இராஜதந்திர ரீதியிலான பிரச்சினையாக்க தேவையில்லை என்றார்.

குறித்த சீன கப்பலில் கொண்டு வரப்பட்ட சேதனை பசளை, இலங்கை கோரியமைக்கு அமைவான தரத்துடன் இல்லாதமையே பிரச்சினை என்று தெரிவித்த அவர், குறித்த கப்பலை திருப்பியனுப்புமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

எனினும், இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டாலும் இதனால் சீனாவிடம் இருந்து சேதனை பசளையை இனிமேல் கொள்ளவனவு செய்யமாட்டோம் என்பது அர்த்தமல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறித்த கப்பலை திருப்பியனுப்பிய பின்னர், இலங்கையின் கோரிக்கைக்கு அமைய உரிய தரத்துடனான பசளையை சீனா வழங்குமாக இருந்தால் அதனை பரிசோதித்து பெற்றுக்கொள்ள தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## தனங்கிளப்பு விபத்தில் அறுவர் படுகாயம்

பட்டா வாகனத்தில் பயணித்த 6 பேர் காயமடைந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## முதலாளிமார் பிரதிநிதிகளுக்கும் காங்கிரஸூக்கும் இடையே முரண்பாடு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப-செயலாளரும் சர்வதேச விவகாரங்களுக்கு பொறுப்பாளருமான பாரத் அருள்சாமி, சம்பள நிர்ணய சபையின் ஊடாக தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றிற்கு ஆயிரம் ரூபாய் வேதனம் அதிகரிக்கப்பட்டு இருக்கிறது.

பெருந்தோட்ட கம்பனிகள், திட்டமிட்ட முறையில் அவர்களின் உழைப்பையும் உரிமைகளையும் சூறையாடுவதாக தெரிவித்த அருள்சாமி, மேலும் கம்பெனிகள் தொழிற்சங்கங்களை பழி தீர்ப்பதாக நினைத்துக்கொண்டு எமது அப்பாவி தொழிலாளர்களை வஞ்சிக்கின்றனர் என்றார். .

சலுகைகள் இன்று தொழிலாளர்களால் அனுபவிக்க முடியவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# துருவப்படுத்தலை அதிகரிக்கும்

கொட்டித் தீர்த்தவர் என சாடியும் உள்ளார்.

ஆட்சியை எப்படியாவது கைப் பற்றிவிட வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற கோஷத்தை நடைமுறைப் படுத்துவதற்கு விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டதே இந்த செயலணியாகும் என்றும் ரவூப் ஹக்கீம் விமர்சித்துள்ளார்.

நாட்டில் இனங்களுக்கிடையிலான வன்செயல்களைத் தொடர்ச்சியாகத் தூண்டி வருபவரும், நீதிமன்றத்தை அவமதித்த குற்றவாளியாக தண்டனை விதிக்கப்பட்டு, சிறைவாசம் அனுபவித்தவரும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் அவருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரைக்கப்பட்டவருமான பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளரான கலகொட அத்தே ஞானசார தேரர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதை ரவூப் ஹக்கீம் வன்மையாக கண்டித்துள்ளார்.

கண்டியில் மாவட்டச் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை (28) நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர், அவர் இதனைச் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது,

எவருக்குமே அறவே புரியாத, எந்தவிதமான தெளிவுமற்ற 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற விவகாரம் பற்றி பல்லின சமூகத்தவர் வாழும் இலங்கை நாட்டில் மக்கள் மத்தியிலும் பொது வெளியிலும் தாறுமாறான கருத்துக்கள் பரவலாக நிலவிவருகின்றது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் உண்மையான நோக்கம் ஆட்சிமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டதா என்ற பலத்த சந்தேகம் வலுப்பெற்றுவரும் நிலையிலும், இன முறுகலை தொடர்ச்சியாகத் தோற்றுவித்து, வன்செயல்களைத் தூண்டி வருபவரும், குறிப்பாக இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும், அல்லாஹ்வையும் பகிரங்கமாகவே நிந்தித்து வருபவரும், பொதுவாக பௌத்தம் தவிர்ந்த ஏனைய சமயங்கள் மீது பகிரங்கமாகத் தமது வெறுப்புணர்வை கொட்டித் தீர்த்து வருபவருமான ஞானசார தேரரை பிரஸ்தாப குழுவுக்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது, நாட்டில் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்ற இனங்களுக்கிடையிலான துருவப்படுத்தலை மேலும் மோசமான நிலைமைக்கே இட்டுச்செல்லும். அரசாங்கத்தின் இச்செயல்பாடானது நாட்டில் அமைதியின்மை தொடர்வதற்கும் இனங்களுக்கிடையிலான மோதல்கள் அடிக்கடி நிகழ்வதற்கும் தூபமிடும் செயலாகவே அமைந்துள்ளதாகத் திட்டவட்டமாக க் கருதலாம் என்றார்.

ஒரு சாராரைத் திருப்திப் படுத்துவதற்காகவே இவ்வாறு நடக்கின்றதென நம்புவதோடு, இதன் பின்னணியில் மறைகரங்களும், வெளிச்சக்திகளும் இருக்கலாம் என்ற நியாயமான சந்தேகம் மேலெழுவதும் இயல்பானதே. அரசாங்கத்தின் மீது நாட்டு மக்கள் மத்தியில் அதிருப்தி அதிகரித்து,அதன் செல்வாக்கு சரிந்து வரும் காரணத்தினால், அரசாங்கத்தின் பலவீனத்தை மூடிமறைப்பதற்கும் மக்களின் கவனத்தை வேறு திசையில் திருப்புவதற்கும் இவ்வாறான கீழ்த்தரமான அணுகுமுறைகள் கையாளப்பட்டு வருவது கண்கூடாகும் என்றும் ரவூப் ஹக்கீம் குற்றஞ்சாட்டினார்.

அத்துடன் பிரஸ்தாப செயலணியில் தமிழ் மக்களின் சார்பிலோ, கிறிஸ்தவர்கள் சார்பிலோ எவருமே உள்வாங்கப் படாததும் ஒரு பாரிய குறைபாடாகும் என்றார்.

இலங்கை முஸ்லிம்களின் அதிகபட்ச ஆணையை பெற்ற அரசியல் கட்சியின் தலைவர் என்ற முறையிலும், நாட்டில் வாழும் சகல இனங்களுக்கு இடையிலும் ஒற்றுமையும் நல்லுணர்வும் நிலவ வேண்டும் என்று நேசிக்கும் பிரஜை என்ற முறையிலும் எனது கண்டனத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் வன்மையாகப் பதிவு செய்கின்றேன் எனத் தெரிவித்த ஹக்கீம், அரசாங்கத்தின் குறுகிய நோக்கம் கொண்ட இந்த நடவடிக்கையானது அரசாங்கத்தின் குறுகிய நோக்கம் கொண்ட இந்த நடவடிக்கையானது குறிப்பாக முஸ்லிம் நாடுகள் மத்தியிலும், பொதுவாக சமாதானத்தை விரும்பும் உலக நாடுகள் மத்தியிலும் இலங்கை ஏற்கனவே வெறுப்பை சம்பாதித்துள்ள நிலையில், நாட்டின் நற்பெயருக்கு பாரிய களங்கத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை என்றார்.

## விவசாயிகளின் உரிமைகள் அரசியலமைப்பில் உள்ளாகும்

கூடுவது தொடர்பில் அவதானம் செலுத்தப்படுகின்ற போதிலும் எப்போதும் விவசாயிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் மற்றும் ஒழுங்குமுறைகளை கொண்டு வர எவரும் செயற்படவில்லை என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

உடுதும்பர பகுதியில் நேற்று (28) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எனினும், தான் கொண்டுவரும் அரசியலமைப்பு சீர்திருத்தங்களில் விவசாயியைப் பாதுகாக்கும் அடிப்படை உரிமைகளை உள்ளடக்குவதாகவும் ஆட்சியாளர்களின் விருப்பத்துக்கு ஏற்ப விவசாயிகளுடன் விளையாட இடமளிக்கப் போவதில்லை என்றார்.

## தபால் மூல மருந்து விநியோகம் நாளை முதல் இடைநிறுத்தம்

மருந்து பொதிகள் விநியோகத்தை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக சகல பிரதி தபால் மா அதிபர்கள், தபால் அத்தியட்சகர்கள் உட்பட அஞ்சல் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து பாதிக்கப்பட்டிருந்த கிளினிக் நோயாளர்களுக்கு கடந்த 03 மாத காலமாக தபால் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களால் கிரமமான முறையில் மருந்து விநியோகம் நடைபெற்றது.

## முல்லைத்தீவில் உறவுகள் கவனயீர்ப்புப் போராட்டம்

- மாங்குளம் வீதியில் அமைந்துள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் அலுவலகத்துக்கு முன்பாக, குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் 1696 ஆவது நாளன்று இடம்பெற்றது

யுத்தம் முடிவுக்கு வந்து பல ஆண்டுகளாகியும் இன்று வரை எந்த தீர்வுகளும் தமக்கு கிடைக்கவில்லை என்றும் சர்வதேச சமூகமே தமக்கான தீர்வை பெற்றுத்தர வேண்டும் எனவும், உறவுகள் கூறினர்.

தமது பிள்ளைகளை தேடி தேடி பெற்றோர்கள் பலர் உயிரிழந்து வருகின்றனர். இந்நிலையில் எமக்கு விரைவில் தீர்வை பெற்றுத் தர சர்வதேச சமூகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 23 இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் நவம்பர் மாதம் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் பொன்னுத்துரை கிருஷ்ந்தன், நேற்று (28) உத்தரவிட்டதாக, கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர்கள், இந்த மாதம் 14ஆம் திகதி, பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து இரண்டு விசைப்படகுகளுடன் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மின்னல் தாக்கி சிறுவன் பலி

குறித்த சிறுவன், தேராங்கண்டல் குளப் பகுதியில், நபர் ஒருவருடன் மாடு மேய்த்துக் கொண்டிருந்த போது, மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார்.

சிறுவனுடன் இருந்த நபர், சிறு காயங்களுக்கு உள்ளானார்.

உயிரிழந்த சிறுவனின் இறுதிக் கிரியைகள், நேற்று (28) நண்பகல் நடைபெற்றது.

## இரண்டு போகம் செய்தால் வெளியில் வர மாட்டார்கள்

ஜனாதிபதி ஊடக மையத்தினால் நேற்று (28) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இணைய வழியிலான ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்று கருத்து வெளியிடுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சேதன பசளை தொடர்பில் பலரும் தவறான மற்றும் எதிரான கருத்துக்களையே தற்போது வெளிப்படுத்தி வருவதாக தெரிவித்த அவர், இந்த முறையின் ஊடக காணப்படும் நன்மைகளை வெளிப்படுத்த முன்வருவதில்லை என்றும் கூறினார்.

தற்போது, உள்நாட்டு உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப்படும் நிலையில், பல சேதன பசளை உற்பத்தியாளர்கள் தற்போது, இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் இணைந்துகொண்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், தற்போது முன்னெடுக்கப்படும் பெரும்போக நெற்செய்கையின்போது, விவசாயிகள் அரசாங்கத்தை திட்டினாலும், பிரச்சினைகள் காணப்பட்டாலும், இன்னும் இரண்டுபோக நெற்செய்கைகளை மேற்கொண்ட பின்னர், சேதன பசளை மூலமான விவசாய முறையில் இருந்து அவர்களை வெளியில் கொண்டுவர முடியாத நிலையொன்று உருவாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அந்தளவுக்கு சேதன பசளை தொடர்பிலும், அதன் நன்மைகள் குறித்தும் விரைவில் விவசாயிகள் புரிந்துகொள்வார்கள் என்றார்.

இதேவேளை, சேதனை பசளை தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானம் திடீரென எடுக்கப்பட்டது அல்ல என்று தெரிவித்த இராஜாங்க அமைச்சர், ஜனாதிபதியின் "சௌபாக்கிய நோக்கு" கொள்கை பிரகடனத்தில் தேதன பசளை முறையிலான விசாயம் குறித்து முழுமையான தெளிவான விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## சீன உரக் கப்பலுக்கான தரகுப் பணத்தை கையளிக்குக

நாட்டில் தற்போதிருக்கும் பிரச்சினையே அதிகம் என்றும் இந்த நிலையில் மற்றுமொரு நெருக்கடியை எதிர்நோக்காமல் சீன உரக் கப்பலை நெருக்கடியிலிருந்து விடுவிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர்களுடன் நேற்று (28) நடைபெற்ற நிகழ்நிலை சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர், சீனக் கப்பலில் உள்ள உரத்தை உரிய முறையில் பரிசோதித்து, அது தகுதியானது எனின் நாட்டுக்குள் கொண்டு வரவேண்டும். இல்லையெனில் அதற்காக பெற்றுக்கொண்ட தரகுப் பணத்தை கட்டாயமாக மீள செலுத்த வேண்டும் என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவாக செயற்படும் அனைத்து அமைப்புகளுக்கும் அதிகாரம் வழங்குவதை உடனடியாக ஆரம்பிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு நேற்று (28) ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளாமல் அரசாங்கத்துக்கு எதிராக உள்ள சகல தரப்பினருடனும் இணைத்து அமைப்புகளின் வலையமைப்பை பலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜயவர்தன, உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் ஆகியோரின் கண்காணிப்பின் கீழ், கொரோனா தொற்று காலத்துக்கு ஏற்றவகையில் மேற்குறிப்பிட்ட வலையமைப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.

தொழிற்சங்கங்கள், பல்கலைக்கழக தொழிற்சங்கங்கள், அரச மற்றும் தனியார் தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட அனைத்து வெகுஜன அமைப்புகளுக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளதென கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட அமைப்புகளின் வலையமைப்பை பலப்படுத்துவதற்கு சமாந்தரமாக கட்சியின் அடையாளத்தின் கீழ் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகள் எதிர்வரும் காலங்களில் ஆரம்பிக்கப்படும் என்றார்.

## விபத்தில் இளைஞன் பலி; வைத்தியர் கைது

இதனையடுத்து, காரை செலுத்திய வைத்தியர் ஒருவரை கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடியைச் சேர்ந்த 21 வயதுடைய ஆதம்பாவை முஹமது அம்ஹர் என்ற இளைஞனே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கல்முனையில் இருந்து மட்டக்களப்பை நோக்கிப் பயணித்த காரும் காத்தான்குடி, பீச் வீதியில் இருந்து பிரதான வீதி சமிக்கை விளக்கு சந்தியை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளுமே, சமிக்கை விளக்கு சந்தியில் வைத்து விபத்துக்குள்ளாகியுள்ளன.

மோட்டர் சைக்கிளில் பின்னால் இருந்தவரே படுகாயமடைந்த நிலையில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிகப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## விசேட பூஜை வழிபாடு

இந்திய நாட்டின் 75ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, இந்த விசேட வழிபாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை - இந்திய மக்கள் இந்த கொடிய நோய்த் தொற்றில் இருந்து விடுபட வேண்டும் என்றும் இருநாட்டு மக்களும் நல்ல நட்புறவுடன் எதுவித பிரச்சினைகளும் இன்றி இறை ஆசியுடன் வாழ வேண்டும் என்றும் வலியுறுத்தி பூஜை வழிபாடு நடைபெற்றது.

இதற்காக இந்திய துணை தூதரக தூதுவர் மற்றும் அதிகாரிகள், சைக்கிளில் பயணம் மேற்கொண்டு, இந்த பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்டிருந்தமை சிறப்பம்சம் ஆகும்.

உணவுகளின் விலைகள் அதிகரிப்பு
# நியாயமற்றது

சந்தைப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து உணவகங்கள், ஹோட்டல்களின் உரிமையாளர்கள் உணவுப் பொருள்களின் விலைகளை நியாயமற்ற முறையில் அதிகரித்துள்ளதாக, நுகர்வோர் உரிமைகளை பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.

செலவுகளை குறைப்பதற்காக குறைந்த விலையில் உள்ள அரிசிகளை பயன்படுத்துவதாகவும் சோற்றுப் பார்சலில் வைக்கப்படும் கறியின் அளவும் குறைக்கப்பட்டுள்ளதாகவும் நுகர்வோர் குற்றம் சுமத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், ஹோட்டல்கள், உணவகங்களின் உரிமையாளர்கள் மேற்கொள்ளப்படும் இந்த அநியாயமான செயற்பாடுகளை கட்டுப்படுத்த அரசாங்கம் தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# சீமெந்தின் விலை மீண்டும் அதிகரிப்பு?



உலக சந்தையில் சீமெந்தியின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால், உள்நாட்டில் இறக்குமதி செய்யப்படும் சீமெந்தியின் விலையும் அதிகரிக்கப்பட வேண்டும் என சீமெந்து இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சீமெந்து இறக்குமதி செய்யப்படும்போது சீமெந்து மூடை ஒன்றுக்கு 1,300 ரூபாய் செலவிடப்படுவதால், சீமெந்து மூட்டையின் விலையும் சிறிதளவு அதிகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சீமெந்துக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விலையை அண்மையில் அரசாங்கம் நீக்கியிருந்தது. இதனால் 50 கிலோகிராம் சீமெந்து மூட்டையின் விலை 93 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு 1,098 ரூபாயாக காணப்படுகிறது.

# சட்டத்தில் பிரச்சினையில்லை; நடைமுறைப்படுத்தில் சிக்கல்



நாட்டிலுள்ள சட்டத்தில் பிரச்சினை இல்லை.சட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலேயே பிரச்சினைகள் காணப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஏரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

பொலிஸார் 10 ஆயிரம் ரூபாய் இலஞ்சமாக பெற்றால் அவர் கைது செய்யப்படுகிறார். அதேபோல அதிபர், ஆசிரியர்கள் 25 ஆயிரம் ரூபாயை இலஞ்சமாக பெறும்போது கைது செய்யப்படுகிறார்கள். ஆனால் அரசியல்வாதிகள், பாரிய ஊழல் மோசடிகளில் ஈடுபடும்போதும் அவர்கள் கைது செய்யப்படுவதோ அல்லது அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படுவதோ இல்லை என்றார்.

நாட்டில் ஒரு சட்டம் இல்லை. இரு சட்டங்கள் இருக்கின்றன. நாட்டில் சட்டம் தொடர்பில் பிரச்சினை இல்லை. நாட்டில் தற்போது காணப்படும் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை நீதிமன்றத்தின் முன்னிறுத்தி அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து தண்டனையை பெற்றுகொடுக்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் ஏரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

எனினும், நீதிமன்றத்துக்கு வழங்கப்படும் தகவல்களின் அடிப்படையிலேயே தண்டனை பெற்றுகொடுக்கப்படும். தகவல்களை மறைத்து தண்டனையைக் குறைக்க முடியும் எனவும், நாட்டில் உள்ள சட்டத்தில் குறைபாடுகள் காணப்படுகின்றன. அதனை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமாக இருந்தால் அதில் பிரச்சினை இல்லை எனவும் ஏரான் விக்ரமரத்ன கூறினார்.


# தடை செய்யப்பட்டிருக்கும் பொருள்கள் சிறையில் சிக்கின

கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் இருவரிடமிருந்து 'சிம் அட்டை, புகையிலை' போன்ற பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

வெலிக்கடை சிறைச்சாலையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸார் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

ஹட்டன் பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதானவரின் உடையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சிம் அட்டை, புகையிலை பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, 41 வயதுடைய கொழும்பைச் சேர்ந்த சந்தேக நபரிடமிருந்து பல்வேறு நிறைகளில் புகையிலைகள் மீட்கப்பட்டுள்ளன.



அனேகமான பகுதிகளில் மழை;
# கிழக்கை நோக்கி நகர்ந்து தாழமுக்கம்

தென்மேற்கு வங்காள விரிகுடா கடல் பிராந்தியத்தில் காணப்படுகின்ற தாழமுக்கமானது தற்போது மேற்கு திசையில் இலங்கையின் கிழக்கு பிராந்தியத்தை நோக்கியும் நகர்ந்து கொண்டிருக்கின்றது.

இதன் தாக்கத்தினால் இலங்கையில் அனேகமான பகுதிகளில் மழை கொண்ட காலநிலை அதிகரிக்கும். முக்கியமாக பிற்பகல் அல்லது மாலை வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை காணப்படும் எனவும் சில பிரதேசங்களில் 100 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சிக்கும் அதிகமான மழை பதிவு செய்யப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் சில பகுதிகளில் காலை வேளைகளிலும் மழை காணப்படலாம்.

இந்த இடியுடன் கூடிய மழை காணப்படும் சந்தர்ப்பங்களில் காற்றும் பலமாக வீசும். எனவே, பொதுமக்கள் இந்த இடி,மின்னல் தாக்கத்தினால் ஏற்படும் சேதங்களை குறைத்துக் கொள்ளும் பொருட்டு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடல் பிராந்தியங்களை பொறுத்தவரையில் வங்காள விரிகுடாவில் காணப்படுகின்ற தாழமுக்க நிலை இலங்கை தீவை சுற்றியுள்ள கடல் பிராந்தியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

எனவே, மீனவர் சமூகம் மற்றும் கடல்சார் தொழிலாளர்கள் இலங்கை வளிமண்டலவியல் ஆராய்ச்சி திணைக்களத்தினால் வெளியிடப்படும் வானிலை முன்னறிவிப்புகளை அவதானிக்கும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இலங்கை தீவை சுற்றியுள்ள அனேகமான கடல் பிராந்தியங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை காணப்படும். திருகோணமலை முதல் காங்கேசன்துறை வரையான கடல் பிராந்தியங்களில் வடகிழக்கு திசையிலிருந்தும் ஏனைய கடல் பிராந்தியங்களில் வடமேற்கு திசையிலிருந்து காற்று வீசும். காலி முதல் ஹம்பாந்தோட்டை ஊடான பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் காற்றின் வேகமானது மணிக்கு 40 கிலோமீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும்.

காலி முதல் ஹம்பாந்தோட்டை ஊடான பொத்துவில் வரையான கடல் பிராந்தியம் கொந்தளிப்பாக காணப்படுவதுடன் கடல் பிராந்தியங்களில் இடியுடன் கூடிய மழை காணப்படும் சந்தர்ப்பங்களில் பலமான காற்று வீசுவதுடன் கடலானது மிகவும் கொந்தளிப்பாக காணப்படும்.

# சீனாவுக்கு நன்றி கூறினார் பிரதமர்



இந்நாட்டின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு சீனாவிடமிருந்து கிடைக்கும் தொடர்ச்சியான ஒத்துழைப்பு தொடர்பில் இலங்கைக்கான சீன தூதுவர் சீ.ஷென்ஹொன் முன்னிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது பாராட்டை தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவை சீன தூதுவர் சீ.ஷென்ஹொன் நேற்று முன்தினம் (27) அலரி மாளிகையில் சந்தித்தபோதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொரோனா தொற்று நிலைமையை கட்டுப்படுத்தல் மற்றும் தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்பு தொடர்பில் சீன அரசாங்கத்துக்கு நன்றிகளையும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு வாழ்த்து தெரிவித்த சீன தூதுவர் சீ.ஷென்ஹொன், அதற்கு சீன அரசாங்கத்தின் ஒத்துழைப்பு தொடர்ந்து இலங்கைக்கு வழங்கப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

சீன மக்கள் வங்கி (PBOC) மற்றும் இலங்கை மத்திய வங்கி (CBSL) இடையிலான 10 பில்லியன் சீன யுவான் மதிப்பிலான இருதரப்பு நிதி பரிமாற்ற ஒப்பந்தமானது, உலகளாவிய முதலீட்டாளர்களின் உணர்வை வலுப்படுத்தவும், இலங்கையின் பொருளாதாரம் மீதான நம்பிக்கையை அதிகரிப்பதற்கும் உதவும் என சீன தூதுவர் இதன்போது கூறினார்.

# பல சொகுசு வாகனங்கள் துறைமுகத்தில் தேங்கின



அரசாங்கம் வாகன இறக்குமதிக்கு தடை விதித்ததன் பின்னர், இறக்குமதி செய்யப்பட்ட 300 இக்கும் அதிகமான சொகுசு வாகனங்கள் துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதாக சுங்கப் பிரதிப் பணிப்பாளர் சுதத்த சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த வாகனங்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட வேண்டிய இறுதித் தீர்மானம் தொடர்பில் நிதி அமைச்சுக்கு கடிதம் அனுப்பியிருப்பதாகவும், எனினும் அந்த கடிதத்துக்கு இதுவரையில் பதில் கிடைக்கவில்லை எனவும் சுங்கப் பிரதிப் பணிப்பாளர் கூறியுள்ளார்.

கடந்த வருடம் மார்ச் மாதம் கொரோனா வைரஸ் நாட்டில் பரவ ஆரம்பித்தன் பின்னர், வாகன இறக்குமதிக்கு நாட்டில் தடை விதிக்கப்பட்டிருந்தது. எனினும் இதன் பின்னரும் சட்டவிரோதமாக வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. எனவே சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட இந்த வாகனங்களை அரசாங்கத்துக்கு உடமையாக்கிக்கொள்வதா? இல்லையா? என்பது தொடர்பில் சுங்கத்திணைக்களம் நிதி அமைச்சிடம் வினவியிருந்தது.

இந்த வாகனங்களில் பெறுமதி பல கோடி ரூபாயாகும் என்பதுடன் நீண்டகாலமாக ஒரே இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதால் பழுதடையும் ஆபத்து இருப்பதாகவும் சுங்கத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

# தடுப்பூசி போடாதவர்களுக்கு அறிவுறுத்தல்



கொரோனா தடுப்பூசியின் முதல் மற்றும் இரண்டாவது டோஸ்களைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் தமது பிரதேச சுகாதார அதிகாரியை தொடர்பு கொண்டு தடுப்பூசியைப் பெறுவதற்கான தினம் ஒன்றை ஒதுக்கிக்கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனா தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாத பலர் சமூகத்தில் இருக்கின்றனர். அவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்படக்கூடிய அவதானம் அதிகம். எனவே, அவர்கள் விரைவாக தடுப்பூசியை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொரோனா தொற்றுநோய் பரவுவதைக் கட்டுப்படுத்த இது பெரும் பங்களிப்பு வகிக்கும் என்றும் அவர் கூறினார்.

மேலும், நவம்பர் மாதம் 1 ஆம் திகதி முதல் கொரோனா தடுப்பூசியின் மூன்றாவது டோஸை வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்றார்.

மீண்டும் கொரோனா அபாயம்;
# வைத்திய சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம்

இலங்கையில் மீண்டும் கொரோனா அலை பரவும் அபாயம் தென்படுவதாக இலங்கை வைத்திய சங்கம் தெரிவித்துள்ளது. இது சம்பந்தமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளதாகவும் இச்சங்கம் தெரிவித்துள்ளது.

கட்டுப்பாடுகள் மற்றும் சட்டங்கள் செயல்படுத்தப்படும் சூழலைக் கருத்தில் கொண்டு, மற்றொரு கொரோனா அலையைத் தடுக்க திட்டவட்டமான நடவடிக்கை எடுப்பது முக்கியமானது எனவும் குறிப்பிட்டுள்ளது.

புதிய கொரோனா அலையொன்று மீண்டும் ஏற்படாமல் தடுப்பதற்கு இலங்கை மருத்துவ சங்கத்தினால் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் 4 பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டு ள்ளன.

தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகளை சிறந்த மேற்பார்வையின் கீழ் கடுமையாக அமுலாக்குதல், ஃ பைசர் தடுப்பூசியின் மூன்றாவது டோஸை முன்னுரிமை குழுக்களுக்கு வழங்குதல் உள்ளிட்ட பரிந்துரைகள் அவற்றுள் அடங்குகின்றன.

மேலும், அதிக தொற்றுநோய் பரவல் மற்றும் நிகழ்வுகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் பரிசோதனைகளை செய்து தொற்றாளர்கள் குறித்து தொடர்ந்தும் கவனம் செலுத்துதல் குறித்த பரிந்துரைகளில் அடங்கும்.

இதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கு மிகவும் வெற்றிகரமாக தடுப்பூசி போடப்பட்டு வருவதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.இதுவரை 340,000 இற்கும் அதிகமான பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ரஞ்சித் பட்டுவன்துடாவ தெரிவித்துள்ளார்.

# ஞானசாரரின் நியமனத்தை ஏற்க முடியாது



ஒரே நாடு- ஒரே சட்டம் இயற்றும் ஜனாதிபதி செயலணிக்கு பொதுபல சேனாவின் பொது செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பதை, ஏற்றுக்கொள்ளவே முடியாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பல வழக்குகளில் குற்றவாளியாக நீதிமன்றம் தீர்ப்பளித்து தண்டனை பெற்ற ஒருவரான ஞானசார தேரரை நியமித்திருப்பதை அறிவு சார்ந்த சமூகமும், நாட்டில் நிலையான சமாதானத்தை விரும்பும் மக்களும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் இன ஐக்கியத்துக்கு எதிராக யார் பேசிவருகிறாரோ, குழப்பவாதியாக மக்களால் யார் அடையாளப்படுத்தப் படுகிறாரோ அவரையே இங்கு முன்னிலைப்படுத்தியுள்ளார்கள். அண்மையில் கூட அவர் மதநிந்தனையும், இறை நிந்தனையும் செய்து சமூகங்களுக்கிடையில் மனக்கசப்புக்களை தோற்றுவித்தவர் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஞானசாரரின் நியமனத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என ஆணித்தரமாக தெரிவித்து கொள்கிறேன். இது தொடர்பிலான பலத்த கண்டனங்களை அரசாங்கத்தின் பொறுப்புதாரிகளுக்கு தெரிவிப்போம் என்றார்.


**தேவை**

வாடி வீட்டுக்கு 35 வயதுக்கும் குறைந்த அனுபவமுள்ள Room Boy தேவை. தங்குமிடவசதி மற்றும் சாப்பாடு கொடுக்கப்படும். குறைந்த சம்பளம் 30,000 ரூபாய். அழையுங்கள் 0777322052


## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9 (1) கீழ் கீழ்க்கானும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல்.

டீ.ஏ.ஜி. அக்வா டெக் (பிரைவேட்) லிமிடெட் — பீ வீ 00246393
இல. 08, பழைய பிரிட்ஜ் வீதி, தாதுரு ஓய, சிலாபம்.

சுப்ரீம் என்ஜினியரிங் (பிரைவேட்) லிமிடெட் — பீ வீ 00246880
இல. 250/02/02, பின்னலந்த வெந்தேசிவத்த, கடவல, துனகஹா.

கரா (பிரைவேட்) லிமிடெட் — பீ வீ 00223595
இல. 50/5, பிரஸ்டேஜ் சிட்டி, கெமுனுபுர, கடுவெல.
கம்பனியின் புதிய பெயர்
டிஜிடல் கரா (பிரைவேட்) லிமிடெட்

கனெக்ட் ஈஸ்ட் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட் — பீ வீ 00227371
இல. 111, டி.பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10.
கம்பனியின் புதிய பெயர்
எக்டா குளோபல் (பிரைவேட்) லிமிடெட்

பியொண்ட் ஜென் (பிரைவேட்) லிமிடெட் — பீ வீ 00222716
இல. 1, லேக் கிரசண்ட், கொழும்பு 02.
கம்பனியின் புதிய பெயர்
க்லவுட்மார்க் (பிரைவேட்) லிமிடெட்

பணிப்பாளர்கள்

இராணுவம் வசம் இருந்த 11 ஏக்கர் காணிகள்

# கையளிப்பு

■ செ. கீதாஞ்சன், சண்முகம் தவசீலன்



முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 7ஆம் வட்டாரப் பகுதியில், இராணுவம் வசமிருந்த 11 ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்குரிய ஆவணத்தை, மாவட்டச் செயலாளர் க.விமலநாதனிடம் முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிலப்பிட்டிய, நேற்று (28) கையளித்துள்ளார்.

68ஆவது படைப்பிரிவு தலைமையகத்தில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து, இந்த ஆவணத்தை, கட்டளைத் தளபதி கையளித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து, மக்கள் புதுக்குடியிருப்பில் மீள குடியமர்ந்த போது, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாகவுள்ள சுமார் 19 ஏக்கர் காணிகள், இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டு, இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், அங்கு மீள்குடியேறிய மக்கள், 2017ஆம் ஆண்டில், குறித்த பகுதியில் இராணுவத்தால் அபகரிக்கப்பட்ட 19 ஏக்கர் காணிகளையும் விடுவிக்குமாறு கோரி, 49 குடும்பங்களைச் சேந்தவர்கள், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாக தொடர் போராட்டமொன்றை ஆரம்பித்தனர்.

போராட்டம் ஆரம்பித்து சுமார் ஒரு மாத காலத்தில், குறித்த காணிகளை மூன்று கட்டங்களாக விடுவிப்பதாக உறுதிமொழி வழங்கப்பட்டது.

இருப்பினும், முதலாவது பகுதி காணிகள் விடுவிக்கும் வரை தாம் போராட்டத்தை தொடர்வதாக தெரிவித்த மக்கள், குறித்த உறுதிமொழிகளுக்கு அமைய முதற்கட்டமாக 7.75 ஏக்கர் காணி விடுவிப்பட்டதை தொடர்ந்து, தொடர் போராட்டத்தை கைவிட்டனர்.

மீதமுள்ள 29 பேரினது 10 ஏக்கர் காணி, இராணுவ முகாமில் அமைக்கப்பட்ட கட்டடங்களை அகற்றிய பின்னர், மூன்று மாதங்களுக்குள் விடுவிக்கப்படும் எனவும் மீதமுள்ள பொன்னம்பலம் வைத்தியசாலைக் காணி விடுவிப்பதற்கு 6 மாத காலம் தேவைப்படுவதாகவும் அப்போது தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் மீதமாக இருந்த காணிகளில் 11 ஏக்கர் காணி, நேற்று விடுவிக்கப்பட்டது.

இன்னும் ஒரு பகுதி காணி, இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

விடுவிக்கப்பட்ட காணிகளில்

## ‘வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க ஏற்பாடு’

■ செ. கீதாஞ்சன்



தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட 11 ஏக்கர் காணிகள், விரைவில் மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படம் என, மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் தெரிவித்தார்.

விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு பிரதேச செயலாளர் ஊடாக ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம் எனவும், அவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், 11 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே, அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள காணிகளில் 11 ஏக்கர் காணியில், கடந்த காலங்களில் மக்களின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்ட இராணுவமுகாம் அமையப்பெற்று இருந்தது எனவும் அந்த காணிகளை மக்களிடம் கையளிப்பதற்காக தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

எதிர்காலத்தில், இந்தக் காணிகளை மக்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை முற்று முழுதாக இல்லாமல் போகின்ற சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்த அவர், எதிர்காலத்தில் தமது மாவட்டத்தில் இடம்பெயர்ந்தவர்கள் இல்லாத நிலை உருவாகும் எனவும் கூறினார்.

‘எதிர்காலத்தில், இவ்வாறு இராணுவ முகாம் அமைந்த காணிகளை மீளவும் வழங்குவதற்கு, இராணுவத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர். அவற்றையும் படிப்படியாக தங்களிடம் வழங்க இருக்கின்றார்கள்’ என்றும் அவர் தெரிவித்தார்.

10 ஏக்கர் காணி உரிமை குறித்து

## ‘மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது’

■ செ. கீதாஞ்சன்



புதுக்குடியிருப்பு கிழக்கில் உள்ள 10 ஏக்கர் காணிகளும் புதுப்புலவு பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு சொந்தமாக இருக்கின்றன எனத் தெரிவித்த புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயக்காந்தன், இந்த காணிகளின் உரிமைகள் தொடர்பில் மேலதிக நடவடிக்கையில் ஈடுபட வேண்டியுள்ளது எனவும் கூறினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், 11 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே, அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 7 ஆம் வட்டாரம் பகுதியில் அமைந்துள்ள 11 ஏக்கர் காணிகள், மாவட்டச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்றார்.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட காணிகளை அந்த காணியில் குடியிருந்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் சட்ட நடவடிக்கையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் ஈடுபட்டுள்ளது. அதுவரை இந்த காணிகள் கிராம சேவையாளரின் கண்காணிப்பில் இருக்கும் என்றும், பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

அதில் 10 ஏக்கர் காணிகள், புதுக்குடியிருப்பு கிழக்கு கிராம அலுவலகர் பிரிவிலும், ஒரு ஏக்கர் காணி சிவநகர் கிராம அலுவலகர் பிரிவிலும் உள்ளடங்கப்பட்டுள்ளன எனவும், அவர் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு கிழக்கில் உள்ள 10 ஏக்கர் காணிகளும் புதுப்புலவு பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு சொந்தமாக இருக்கின்றன எனத் தெரிவித்த ஜெயக்காந்தன், இந்த காணிகளின் உரிமைகள் தொடர்பில் மேலதிக நடவடிக்கையில் ஈடுபட வேண்டியுள்ளது எனவும் கூறினார்.

சீருடை விவகாரம்:

## பார்த்திபனுக்கு அழைப்பு

■ எம்.றொசாந்த்



யாழ்ப்பாணம் மாநகரில், தண்டப் பணம் அறவிடும் நடைமுறையை கையாள்வதற்காக அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் மாநகர காவல் படையின் உத்தியோகத்தர்கள் ஐந்து பேருக்கு, சீருடையை வடிவமைத்துப் பெற்றுக்கொடுத்தமை தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக, மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்திபன், பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவின் யாழ்ப்பாணம் அலுவலகத்துக்கு, நேற்று (28) காலை 10.30 மணிக்கு சமூகமளிக்குமாறு, அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரத்தை தூய்மையான நகரமாகப் பேணுவதற்காக மாநகர சபை ஊழியர்கள் ஐவர், மாநகர காவலர்களாக தனியான சீருடை அணிந்து கடந்த ஏப்ரல் மாதம் கடமைக்கு அமர்த்தப்பட்டனர்.

எனினும், உத்தியோகத்தர்கள் அணிந்திருந்த சீருடை, தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல்துறையின் சீருடைக்கு ஒத்தது என சர்ச்சை எழுந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக, யாழ்ப்பாணம் மாநகர மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த நிலையில் சீருடையை வடிவமைத்து பெற்றுக்கொடுத்தமை தொடர்பில், யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் வரதராசா பார்த்திபன், விசாரணைக்காக பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.







## மர நடுகை...

‘மரம் நடுவோம் எம் சந்ததியை காப்போம்’ எனும் தொனிப்பொருளில், மன்னார் – மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாலையடி, புதுக்குளம் மகா வித்தியாலயம் பாடசாலையில், நேற்று (28) காலை 9.30 மணியளவில், மர நடுகை ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது. வனவளத் திணைக்களத்தின் ஏற்பாட்டில், மன்னார் மாவட்டச் செயலாளர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில், இந்நிகழ்வு நடைபெற்றது.
(படப்பிடிப்பு: எஸ்.றொசேரியன் லெம்பேட்)

கிழக்கு மாகாணத்தில்

# ஐந்து டெங்கு மரணங்கள்

### 3,175 பேருக்க டெங்கு காய்ச்சல்

■ எம்.எஸ்.எம். ஹனீபா



கிழக்கு மாகாணத்தில் கடந்த ஜனவரி மாதத்திலிருந்து இதுவரை 3,175 பேருக்கு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாகவும் ஐந்து டெங்கு மரணங்கள் சம்பவித்துள்ளதாகவும், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர் எம். தௌபீக், நேற்று (28) தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் 222 டெங்கு நோயாளர்களாகவும், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் 2,764 பேரும் 04 நபர்கள் மரணமடைந்துள்ளதாகவும், திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் 147 பேரும் ஒரு மரணம் சம்பவித்துள்ளதாகவும், அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் 42 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தற்போது பருவகால மழை பெய்து வருவதால் டெங்கு நுளம்பு பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும், அண்மைக்காலமாக டெங்கு நோயாளர்கள் அதிகமாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் கூறினார். டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான வெற்றுக் காணிகளை வைத்திருப்பவர்கள் இரண்டு வார காலத்திற்குள் துப்பரவு செய்ய வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் ஒருங்கிணைந்த டெங்கொழிப்பு வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு குழுவினர், டெங்கொழிப்பு செயலணி, சமூக மட்ட தலைவர்கள் ஆகியோர் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று டெங்கு காய்ச்சல் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டல் செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

## ‘ஒரே நாடு ஒரே சட்டம், அரசாங்கத்துக்கு பாதகம்’

■ ஹஸ்பர் ஏ ஹலீம்



“ஒரே நாடு ஒரே சட்டம்” ஜனாதிபதி செயலணி நியமனம், சிறுபான்மை இனத்துக்கு எதிர் மாற்றமாக செயற்பட்டால், எதிர்கால தேர்தல்கள், அரசாங்கத்துக்கு பாதகமாக அமையும் என ஜனநாயக இடதுசாரி முண்ணனியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் றாசிக் றியாஸ்தீன் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு நேற்று (28) அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“இந்தச் செயலணியில், முஸ்லிம்கள் நால்வர் உட்பட 13 நபர்கள் நியமனம் செய்யப்பட்ட நிலையில், தமிழ் சமூகத்தை சேர்ந்தவர்கள் எவரும் இல்லை.

“சிறுபான்மை சமூகத்தின் உரிமைகளை பறித்தெடுக்காமல், பக்கச்சார்பான இனம்சார் முடிவுகளின்றி இச்செயலணி செயற்பட வேண்டும்.

“ஜனநாயக இடதுசாரி முண்ணனி கட்சி, அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக செயற்பட்டு வரும் நிலையில், எதிர்காலத்திலும் பொதுஜன அரசாங்கத்தை நிலை நிறுத்த வேண்டும் என நம்புகிறோம்.

“ஆனாலும், இவ்வாறான ஒரே நாடு ஒரே சட்டம் என்ற செயலணி, சிறுபான்மை சமூகத்தின் தமிழ் மற்றும் முஸ்லிம்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டும். அவ்வாறு பாதுகாக்கா விட்டால், எதிர்காலத்தில் மக்கள் தீர்ப்பை வழங்குவார்கள்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருள்களின் விலையேற்றம்;

## ‘அபிவிருத்தியில் பாரிய பின்னடைவு’

■ இ.சுதாகரன்



அத்தியாவசியப் பொருள்களின் விலை நாளுக்கு நாள் இரு மடங்காக உயர்த்துகின்ற செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் இது தொடர்பாக அரசாங்கமானது மக்களின் நலன் கருதி செயற்பட வேண்டுமெனவும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம், கொரோனா வைரஸ் தாக்கத்தைக் காரணமாகக் கொண்டு அதிகரிக்கின்றமை குறைந்த ஊதியத்தைப் பெறுகின்ற மக்கள் மத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் தன்நிறைவில் மிக முக்கியமான விடயமாகத் திகழும் உழைப்பு மூலதனம் மற்றும் கல்வி ஆகியன மூன்றிலும் பின்னடைவான தன்மை காணப்படுமாயின் நாட்டின் அபிவிருத்தி இலக்கில் பாரிய பின்னடைவு ஏற்படும். அவ்வாறான நிலைமையிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உள்ளது.

மாற்றுத் திறனாளிகளுக்கான

## ‘தொழில் வழங்கல் சட்டத்தை மதிக்கவும்’

■ வடமலை ராஜ்குமார்



மாற்றுத் திறனாளிகளுக்கு 3 சதவீதம் தொழில் வாய்ப்பு வழங்கும் சட்டத்தை, அரச மற்றும் தனியார் துறைகளில் கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டுமென கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள பணிப்பாளர் திருமதி என்.பிள்ளைநாயகம் தெரிவித்தார்.

நவஜீவன நிறுவனம் மற்றும் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் ஆகியன இணைந்து விசேட மாணவர்களின் கல்வியை மேம்படுத்த ஐந்தாண்டு திட்டம் தயாரிக்கும் நிகழ்வு, திருகோணமலை சர்வோதய வள நிலையத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய மாகாண கல்வித் திணைக்கள பணிப்பாளர், “மாற்றுத்திறன் மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் தொழிற் கல்வியை அதிகமாக இணைக்க வேண்டும். அவை அவர்கள் தமது எதிர்காலத்தில் இன்னொருவரில் தங்கியிருக்காமல் சுயசார்பு உடையவர்களாக்கும்.

“அத்துடன், மாற்றுத் திறனுடைய பெண் மாணவர்கள் தொடர்ச்சியாக கற்று நிறைவு செய்யாமல் இடைவிலகல் அதிகமாக காணப்படுகிறது. அதற்கு பெற்றோர்கள் மத்தியில் விழிப்புணர்வு அவசியம்” என்றார்.

காத்தான்குடி ஆதார

## வைத்தியசாலைக்கு நிபுணர்கள் நியமனம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்




காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்கு மகப்பேற்று வைத்திய நிபுணர் மற்றும் சிறுவர் வைத்திய நிபுணர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் என காத்தான்குடி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் டொக்டர் எம்.எஸ்.ஜாபீர் தெரிவித்தார்.

காத்தான்குடி ஆதார வைத்தியசாலை கொவிட் சிகிச்சை நிலையமாகவும் செயற்பட்டு வரும் நிலையில், தற்போது படிப்படியாக வழமை நிலைமைக்கு திரும்பி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்த வகையில், மேற்படி இரு நியமனங்களுடன், தொற்றா நோய்க்கான சிகிச்சைப் பிரிவு மற்றும் அது தொடர்பான பரிசோதனைகள் ஆலோனை வழங்கல் என்பனவும் காத்தான்குடி ஆதார வைத்தியாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எரிபொருள்

## கொள்கலன் விபத்து; சாரதி படுகாயம்

■ எப்.முபாரக்



திருகோணமலை, அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், எரிபொருள் கொள்கலன் ஒன்று, நேற்று (28) அதிகாலை குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில், அதன் சாரதி படுகாயமடைந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தளாய் குளத்தை அண்டிய பகுதியிலுள்ள தொலைபேசி கம்பத்தில் மோதியே கொள்கலன் குடைசாய்ந்துள்ளது.

கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு எரிபொருள் ஏற்றுவதற்காக சென்ற கொள்கலனே இவ்வாறு குடைசாய்ந்துள்ளதாகவும் விபத்தில் பன்னிப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய ஒருவரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் அக்போபுர பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைக் கலக்கமே, இந்த விபத்துக்கு பிரதான காரணமென ஆரம்பக்கட்ட பொலிஸ் விசாரணைகளிலிருந்து அறியமுடிகின்றது.

# ஆடை பிரச்சினையை அதிரடியாய் தீர்த்தார் ஜீவன்

■ எஸ்.கணேசன்

தலவாக்கலை பகுதிகளிலுள்ள 16-18 வயது பிரிவு மாணவர்களுக்கு நேற்று (28) தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையின் போது, பெரும் சலசலப்பு ஏற்பட்டது. அரசியல் தலையீட்டுக்கும் அது வழிவகுத்தது. இறுதியில் ஒரு மணிநேர ஸ்தம்பிதத்தின் பின்னரே தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பமானது.

தலவாக்கலை தமிழ்த் தேசிய, தலவாக்கலை சுமன தேசியக் கல்லூரிகள், பாரதி தமிழ் மகா, வட்டகொடை தமிழ் மகா, வட்டகொடை சிங்கள மகா, சென்கிளயார் தமிழ் மகா கிரேட்வெஸ்டன் தமிழ் மகா வித்தியாலயங்கள் ஆகியனவற்றை சேர்ந்த 16-18 வயது பிரிவு மாணவர்களுக்கு நேற்று (28) சுமன தேசிய கல்லூரியில் 'பைசர்' தடுப்பூசி ஏற்றப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.



பாடசாலையை விட்டு இடைவிலகிய, சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றியவர்கள் உட்பட சுமார் ஆயிரத்து 500 பேருக்கு தடுப்பூசி ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

தடுப்பூசியை பெறுவதற்கு மாணவர்கள் பெற்றோர்கள் சகிதம் வந்திருந்தனர். சீருடை மற்றும் சாதாரண ஆடைகளில் மாணவர்கள் வந்திருந்தனர். இதன்போது, சீருடை அணிந்து வந்த மாணவர்களுக்கு மட்டுமே தடுப்பூசி வழங்கப்படும் என கொட்டகலை சுகாதார பிரிவுக்குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி குறிப்பிட்டுள்ளார். இதனையடுத்து அங்கு சாதாரண ஆடைகளில் வந்த மாணவர்கள், அவர்களின் பெற்றோர் மற்றும் சுகாதார அதிகாரிகளுக்கு இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இது தொடர்பில் தலவாக்கலை, லிந்துலை நகர சபை தலைவருக்கு தெரியப்படுத்தப்பட்டது. அவரும், கொட்டகலை பிரதேச சபையின் உறுப்பினர்கள் சிலரும் சம்பவ இடத்துக்கு வந்து பேச்சு நடத்தினர். எனினும், தடுப்பூசி ஏற்றப்படவில்லை.

இறுதியில் சம்பவ இடத்துக்கு வந்த இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், மத்திய மாகாண சுகாதார பணிப்பாளருடன் தொலைபேசி மூலம் மூலம் கலந்துரையாடி, அனுமதியைப் பெற்றுக்கொடுத்தார். அதன்பின்னரே சகலரும் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.



## ஹட்டன் நகர சபை ஊழியரின் முன்மாதிரி

■ சுதத்.எச்.எம்.ஹேவா, ரஞ்சித் ராஜபக்ஸ

ஹட்டன்-டிக்கோயா நகர சபை ஊழியர் ஒருவரால், வீதியில் இருந்து கண்டெடுக்கப்பட்ட பணமானது, அதன் உரிமையாளரிடம் வழங்கப்பட்டுள்ளது.

ஹட்டன்- டிக்கோயா நகர சபையின் தவிசாளர் எஸ். பாலச்சந்திரனால் இந்தப் பணம் உரியவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நகரசபையின் துப்புரவு பிரிவில் கடமையாற்றும் ஊழியரான ஜே. செல்வராஜ் என்பவர், வீதியை துப்புரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது, ஹட்டன்- புனித கப்ரியல் பாடசாலைக்கு அருகில், 52,000 ரூபாய் பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பின்னர், அந்த ஊழியர் கண்டெடுத்த பணத்தை, தவிசாளரிடம் வழங்கியுள்ள நிலையில், உரிமையாளர் கண்டுபிடிக்கப்பட்டு, பணம் கையளிக்கப்பட்டுள்ளது.

மாத்தளை பஸ் விபத்தில்

## 13 பேர் காயம்



■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளையிலிருந்து செலகம வரை பயணித்த தனியார் பஸ்ஸொன்று மாத்தளை-கொலென்னேவத்த பகுதியில் விபத்துக்குள்ளானதில் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று (28) பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு காயமடைந்தவர்கள் மாத்தளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களுள் 3 வயது குழந்தையும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மற்றுமொரு வாகனமொன்றுக்கு இடமளித்த போதே, இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மஹவெல பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





## உதவிய கரங்கள்...

கடந்த ஒரு மாதகாலமாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வாழ்வாதாரத்தை இழந்த, தலவாக்கலை –கட்டுக்கலை தோட்டத்தில் வாழும் 119 குடும்பங்களுக்கு, வன்னிஹோப் நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில், மலையக சமூக அபிவிருத்தி பேரவையால் உலருணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.(பி.கேதீஸ்)

"ஒரே நாடு ஒரே சட்டம்" செயலணியில்

## தமிழன் எங்கே?

### வடிவேல் சுரேஷ் ஆவேசம்

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய, இலங்கையினுள் "ஒரே நாடு - ஒரே சட்டம்" என்பதை செயற்படுத்தும் சட்ட வரைபை தயாரிக்க பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையில், 13 பேரை உள்ளடக்கிய விசேட ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டுள்ளது என்பது கேலிக்கூத்தாகவே உள்ளது. என இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள குழு முரண்பாடாக உள்ளது என தெரிவித்த அவர், தற்போதுள்ள சட்டத்தை சரியாக செயல்படுத்த முடியாமல் உள்ளது என்றுதான் புதிய ஒரு குழுவை அமைக்க வேண்டிய கட்டாயம் நிலவியது.ஆனாலும் தற்போது அமைக்கப்பட்டுள்ள குழுவின் நோக்கம் என்னவாக இருக்கப்போகின்றது?

எது எவ்வாறு இருப்பினும் இச் செயலணியில் தமிழ் அங்கத்துவம் இல்லை என்பது மிகவும் கண்டிக்கத்தகக்கது என வடிவேல் சுரேஷ் எம்.பி தெரிவித்துள்ளார்.

மூன்றாம் தரப்பை நாடுவது

## எமது நாட்டு புத்திஜீவிகளை அவமதிக்கும் செயலாகும்

### இராதா எம்.பி தெரிவிப்பு

■ எஸ்.கணேசன்

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உரம் இலங்கை நிறுவனத்தால் நடத்தப்பட்ட பரிசோதனையை ஏற்பதற்கு சீன நிறுவனம் மறுத்துள்ளது. இதனால் மூன்றாம் தரப்பை நாடுவதற்கு தற்போது திட்டமிடப்பட்டுள்ளது. இதனை அனுமதிக்க முடியாது. மூன்றாம் தரப்பை நாடுவது எமது நாட்டிலுள்ள புத்திஜீவிகளை, ஆய்வாளர்களை அவமதிக்கும் செயலாகவே அமையும் என பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து பெறப்பட்ட கதிரைகள், நீர் தாங்கிகள், கூடாரங்கள் என்பவற்றை, அக்கரப்பத்தனை ஹோல்புறுக் ஸ்ரீ கோவிலில் வைத்து பயனாளிகளுக்கு வழங்கிய நிகழ்விலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சீனாவில் இருந்து சேதனப் பசளையை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அந்த சேதனப் பசளையில் தீங்கு விளைவிக்கக்கூடிய பக்ரீரியாக்கள் இருப்பதாக எமது நாட்டு ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டினர். ஆய்வுகள் மூலம் அதனை உறுதிப்படுத்தினர்.

"எனவே, உரத்தட்டுப்பாட்டால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால், உரத்தை வழங்குவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்."

"முன்னேற்பாடுகள் எதுவும் இன்றி இரசாயன உரத்துக்கு திடீர் தடை விதிக்கப்பட்டதால் விவசாயிகள் இன்று பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.





பகுதியளவு உடைந்துள்ள பாலத்தை

## புனரமைக்குமாறு ஹோப் மக்கள் கோரிக்கை

■ நவி

ஹங்குராங்கெத்த பிரதேச செயலகத்துக்கு அந்த ட்பட்ட ஹேவாஹெட்ட , ஹோப் தோட்டத்துக்கு செல்லும் பாதையில் உள்ள சிறிய பாலமொன்று சேதமடைந்துள்ளதால், போக்குவரத்து நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

கடந்த சில நாள்களாக கடும் மழை பெய்துவரும் நிலையிலேயே இப்பாலம் பகுதியளவு சேதமடைந்துள்ளது. அதனை உடன் புனரமைக்காவிட்டால் பாலம் முழுமையாக சேதமடையும் அபாயம் இருப்பதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மாற்றுவழி இல்லாததால் தற்போது ஓட்டோ உட்பட சிறிய ரக வாகனங்கள் மட்டுமே இப்பாலத்தின் ஊடாக, பெரும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பயணிப்பதாகவும் தோட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, இப்பாலத்தை புனரமைத்து, தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் ஹோப் தோட்ட மக்கள், சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளிடமும், அரசியல் பிரமுகர்களிடமும் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

வடகிழக்கு பருவமழையால் நுவரெலியா மாவட்டத்தின்

## பேரிடர்களைக் குறைப்பது தொடர்பில் அவதானம்

■ டிசந்ரு



வடகிழக்கு பருவமழையால் ஏற்படக்கூடிய பேரிடர்களை குறைக்கும் வகையில், கவனமாக செயல்பட வேண்டும் என நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நேற்று (28) நடைபெற்ற நுவரெலியா மாட்ட பேரிடர் முகாமைத்துவ குழு கூட்டத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், அனர்த்தம் ஏற்பட்டால் தொற்றுநோய் நிலைமையை முகாமைத்துவம் செய்து, அதனை வெற்றிகரமாகக் கையாள்வதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும்.

வடகிழக்கு பருவ மழையினால் நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா, வலப்பனை மற்றும் ஹங்குரன்கெத்த பிரதேசங்கள் பாதிக்கப்படும். எனவே, இந்த பாதிப்பில் இருந்து மக்களை பாதுகாக்க நாம் முன்னெச்சரிக்கையாக திட்டமிட்டு செயல்படவேண்டும். என மாவட்ட செயலாளர் கூறினார்.

இந் நிகழ்வில், மேலதிக மாவட்ட செயலாளர் சுஜீவ போதிமான, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் மற்றும் நுவரெலியா மாவட்ட பிரதேச செயலாளர்களும் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

## ஹட்டனில் கைவரிசை; கொழும்பு நபர் சிக்கினார்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் நகரிலுள்ள 3 வர்த்தக நிலையங்கள் நேற்று (28) அதிகாலை உடைத்து, அங்கிருந்த பணம் உள்ளிட்ட பொருள்களைத் திருடிய நபர், சந்தேகத்தின் பேரில் பிடிக்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

ஹட்டன் நகரிலுள்ள கட்டட பொருள்கள், ஆடை மற்றும் தொலைபேசி வர்த்தக நிலையங்கள் என்பனவற்றை நேற்று அதிகாலை 2 மணியிலிருந்து 4.30 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் உடைத்து பொருள்களைத் திருடியுள்ளார்.

இந்த நிலையில், வர்த்தக நிலையமொன்றுக்குள் ஒருவர் நுழைந்ததை அவதானித்த தனியார் பாதுகாப்பு பிரிவின் அதிகாரியொருவர், அந்த வர்த்தக நிலைய உரிமையாளருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த வர்த்தக நிலைய பணியாளர்கள், அயலவர்கள் இணைந்து



சந்தேகநபரைப் பிடித்து ஹட்டன் பொலிஸிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் கொழும்பு- சப்புகஸ்கந்த பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் இவர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்றும் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மற்றுமோர் அலைக்குள் தாங்களாகவே சிக்கிக் கொள்ளும் அபாயம்

கொரோனா தொற்றின் மற்றுமோர் அலை, ஒருபோதும் உருவாகிவிடவே கூடாதென்பதில் ஒரு சிலரைத் தவிர, அத்தனை பேரும் உறுதியாக இருக்கின்றனர் என்பது கொஞ்சம் வெளியில் தலையை நீட்டிப் பார்த்தால் புலனாகும். எனினும், நீங்கள் என்ன சொல்வது நாங்கள் என்ன? கேட்பது என்பதைப்போல பலரும் நடந்துகொள்வது கவலையளிக்கிறது.

பயணக் கட்டுப்பாடுகள் யாவும் ஒக்டோபர் 31ஆம் திகதியன்று அதிகாலை 4 மணியுடன் முழுமையாக தளர்த்தப்படுகின்றது. மாகாணங்களுக்கு இடையிலான பொதுப் போக்குவரத்துச் சேவைகள் அன்றைய தினமே ஆரம்பிக்கவிருக்கின்றன. இந்நிலையில், மாகாணங்களுக்குள்ளே போக்குவரத்துகள் இடம்பெறுகின்றன. மக்களின் நடமாட்டங்கள் நாளுக்கு நாள் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

ஆரம்பப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் மட்டுமன்றி பெற்றோரும் தங்களுடைய பிள்ளைகளை மிக உற்சாகத்துடனும் உணர்ந்தும், பாடசாலைகளுக்கு அழைத்து வந்து விட்டுச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. இதற்கிடையிலேயே 12 வயதுக்கும் 19 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களுக்கு தடுப்பூசியை ஏற்றும் செயற்பாடுகள் துரிதமாக முன்னெடுக்கப்படுகின்றன.

ஒரு சில இடங்களில், சீருடையில் வந்தால் மட்டுமே தடுப்பூசியை ஏற்றுவோமென சில அதிகாரிகள் விதண்டாவாதம் செய்துள்ளனர். சீருடைக்கும் தடுப்பூசிக்கும் எந்தவிதமான சம்பந்தமுமே இல்லையென்பதை முதலில் புரிந்துகொள்ளவேண்டும். அதேபோல, கொரோனா தொற்று உடைகளை வைத்தோ அல்லது சீருடைகளைப் பார்த்தோ தொற்றிக் கொள்வதில்லை என்பதில், கவனமாக இருத்தல் அவசியமாகும்.

தடுப்பூசியை ஏற்றிக்கொண்ட மாணவர் பிரிவை அழைக்காமல், தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளாத மாணவர் குழாமை, பாடசாலைகளுக்கு அழைத்தமையிட்டு பலர் கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தனர். இந்நிலையில், ஆரம்பத் தரங்களை ஆரம்பித்த பல பாடசாலைகளில் கொரோனாத் தொற்று உருவாகியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

இதனை ஒரு குற்றச்சாட்டாக பார்க்காமல் விழிப்புணர்வுடன் நோக்க வேண்டும் இல்லையேல் மற்றுமோர் அலை உருவாகுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும். அவ்வாறானதோர் அலை உருவாகிவிட்டால், மீண்டும் தலையைத் தூக்குவதென்பது நினைத்துக்கூட பார்க்கமுடியாத ஒன்றாகிவிடும். ஆக, சுகாதார வழிகாட்டல்கள் அத்தனையையும் அச்சொட்டாக கடைப்பிடிப்பதே சகலரும் சாலப் பொருத்தமானது.

பாடசாலைகளுக்குச் சென்று திரும்பும் பிள்ளைகளின் முகங்களில் ஒருவகையான புத்துணர்ச்சியையும் தெம்பையும் அவதானிக்கமுடிகின்றது. பெற்றோர்களும், அதிகாலையிலேயே எழுந்து, சுறுசுறுப்பாக வேலைகளை ஆரம்பிக்கத் தொடங்கிவிட்டனர். சீருடைகளைத் தைக்கும் தையல்காரர்களுக்கு மேலதிகமாக வேலைகள் வரத் தொடங்கிவிட்டன.

பாடசாலைகளுக்கு அண்மையில் இருக்கும் சிற்றுண்டிக் கடைகள் திறக்கப்பட்டு, வர்த்தச் செயற்பாடுகள் ஓரளவுக்கு இடம்பெறுகின்றன. பாடசாலை வாகனங்கள் ஓடத் தொடங்கியுள்ளன. இவ்வாறான நிலையில், மீண்டுமொரு அலை உருவாகுமாயின், மீண்டுமொரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய நிலைமை ஏற்படும். அவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டியது ஒவ்வொருவது கைகளிலேயே உள்ளது என்பதை மீண்டும், மீண்டும் ஞாபகமூட்டி, மீண்டுமோர் அலைக்கு வித்திட்டாது, பயணத்தை தொடர்வதற்கு சுகாதார வழிகாட்டல்களை இறுக்கமாக கடைப்பிடிக்கவேண்டும் என்பதே எமது வலியுறுத்தலாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.





அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

தெருவில் சும்மா போகும் நாய்க்குக் கல்லால் எறிந்து, அதனுடன் விரோதிக்க வேண்டிய தேவையில்லை. எதிரிகளுடன் மட்டுமல்ல, எவருடனும் பகையை வளர்த்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இந்தச் செயல்களால் ஏது நன்மைகள் கிட்டப்போகின்றன? பிடிக்காதவர்களுடன் வர்மம் காட்டக்கூடாது. அவர்களை உங்கள் பக்கம் ஈர்க்க, நட்பின் வழியைப் பின்பற்றுங்கள்.

கோபம், ஆணவத்தால் எதையும் சாதிக்க முடியாது; வெறுப்புத்தான் மிஞ்சும். துன்பங்களை உடைத்தெறிய, நெஞ்சில் அமைதியுடன் யாரையும் கனிவுடன் நோக்குவோம்.

உங்களது நியாயங்களை நிலைநிறுத்த, பிறரை விடாப்பிடியாக வற்புறுத்தத் தேவையில்லை. சொல்ல வேண்டிய விடயத்தில், 'நான்' என்ற மமதை கலக்கலாகாது. பணிவுடன் பேசுவதே நிரந்தர வெற்றிக்கு வழிவகுக்கும்.

மனிதனுடன் மட்டுமல்ல; மிருகங்கள், பட்சிகள் என அனைத்து உயிர்களிடமும் பாசத்துடன் நோக்கினால், அவைகள் உங்களுடன் உறவாகி விடும். இந்த உண்மையைச் செயலில் காட்டுங்கள். அனுபவம் மூலம் உணர்வீர்கள்.

கர்வம், அகங்காரம் என்பவை தேகத்தின் நலனுக்கும் கேடானவை; பதற்றம் வேண்டாம்; சாந்தியுடன் நெஞ்சத்தை வைத்திருங்கள். கடவுளை நம்பும் நாம், அனைவருக்கும் பிடித்ததைச் செய்வதே மேன்மை.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# வடபுலத்தில் சாதியம்: ஒக்டோபர் நினைவுகள்




தெ. ஞானசீர்த்தி மீநிலங்கோ


ஈழத்தமிழ்ச் சமூகத்தில் சாதியம் ஒழிந்துவிட்டது என்ற குரல்கள் அதிகாரத் தோரணையில் ஒலிப்பது புதிதல்ல. 'மூன்று தசாப்தகால விடுதலைப் போராட்டமும் சாதியத்தை இல்லாமல் செய்துவிட்டது', 'இல்லாத ஒரு விடயத்தை ஏன் பேசுகிறீர்கள்' என்ற கோசங்கள் தொடர்ந்தும் சமூக ஊடகங்களில் ஒலித்த வண்ணம் உள்ளது. கடந்த மாதம் வட்டுக்கோட்டையில் சாதியின் காரணமான இடம்பெற்ற வாள்வெட்டு நிகழ்வு இதற்கான அண்மைய சான்று. பூனை கண்ணை மூடிவிட்டால் உலகம் இருட்டாகிவிடுமா என்ன?

ஒரு நீண்ட விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த ஒரு சமூகம் என்ற ஷவெட்டிப்பெருமைக்குள்/ எதுவும் இல்லை என்பதை உணர்த்தும் வகையில் ஈழத் தமிழ்ச்சமூகத்துக்குள் அக ஒடுக்குமுறைகள் தொடர்ந்தும் நிலவி வருகின்றன. இது விடுதலைப்போராட்டத்துக்கு முன்பும் இருந்தது. விடுதலைப் போராட்ட காலத்திலும் இருந்தது. போர் முடிந்த பின்னரும் இருக்கிறது. இன்றுவரைத் சாதியத்தை எம்மால் ஒழிக்க முடியவில்லை. ஈழத்தமிழர்கள் புலம்பெயரும் போதும் தங்களோடு பத்திரமாகக் கொண்டுசென்ற பழஞ்சுமைகளில் ஒன்று சாதியம்.

சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகள் உற்பத்தி உறவுகளின் அடிப்படையிலேயே உருவாகின்றன. ஆனால் உற்பத்தி உறவுகளோடு தொடர்புபடாத சில ஏற்றத்தாழ்வுகளும் சமூகங்களில் உள்ளன. மேற்குலகில் நிறவாதம் எவ்வாறு உற்பத்தி உறவுகளோடு தொடர்புபடாததோ அதேபோல இந்தியத் துணைக்கண்டத்தில் சாதியம். பல நூற்றாண்டுகளாகியும் நிறவாதத்தையும் சாதியத்தையும் ஒழிக்க முடியவில்லை. இதற்கான காரணங்கள் ஆழமானவை.

சாதியம் செய்யும் தொழிலை அடிப்படையாகக் கொண்டு ஒரு குழுவினருக்கான அடையாளத்தை மட்டுமின்றி அரசியல் பொருளாதார, சமூக, பண்பாட்டு விடயங்களை அவர்கள் மறுதலிக்க முடியாதவாறு தீர்மானிக்கின்ற சமூகக் கட்டமைப்பாக தோற்றம் பெற்றது. இது கிழைத்தேய கூட்டு வாழ்க்கை அல்லது குழு வாழ்க்கை முறையின் பாதகங்களின் ஒன்றாகும். இச்சமூகக் கட்டமைப்பு தேசிய அரசுகளின் தோற்றத்துடன் எவ்வாறு அரச அதிகாரக் கட்டமைப்புடன் சமரசம் செய்து கொண்டுள்ளது என்பதைப் பார்த்தால் தேசிய அதிகாரத்தின் உருவாக்கமும் நிலைப்பும் சாதியக்கட்டமைப்புகளுக்கூடாக இயங்குவதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்பது புலனாகும்.

ஈழத் தமிழ் மக்களின் அரசியலும் போராட்டமும் வாழ்க்கையும் பண்பாட்டுக் கூறுகளும் சாதியத்தின் அடிப்படையில் நிறுவப்பட்டவையாகவும் அதனடிப்படையில் வழிநடத்தப்படுவனவாகவே இன்றும் இருக்கின்றன என்பது ஏற்கக் கடினமாயினும் உண்மையாகுவே.

இன்று சமூகத்தில் மேம்போக்காக நிலவுகின்ற சில சமத்துவங்கள் கருணையினால் வழங்கப்பட்டவையல்ல. அவை ஒரு நீண்ட நெடிய போராட்டத்தின் ஊடே சாத்தியமானவை. ஒக்டோபர் நினைவுகள் எனும்போது 1960களில் நடந்த சாதியத்திற்கெதிரான போராட்டங்களை நினைவுபடுத்தல் தகும். அகிம்சை வழியில் போராட்டம், சத்தியாக்கிரகம் என தமிழ்த் தேசிய அரசியல் தமிழ் மக்களை ஏய்த்துக் கொண்டிருந்த காலத்தில் மக்களின் பரந்துபட்ட எழுச்சியுடன் வடபுலத்தில் நிகழ்த்தப்பட்ட சாதியத்திற்கெதிரான போராட்டங்கள் ஈழத்தமிழ் மக்களின் வரலாற்றில் மறக்கப்படக் கூடாத பக்கங்களை உடையது. சுமார் ஐந்து (1966-71) வருடங்கள் நீடித்த வெகுஜனப் போராட்டங்கள் சாதிய தீண்டாமையை உடைத்தெறிந்தது. தேனீர்க் கடைகள், ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் சமத்துவமும் ஜனநாயகமும் நிலை நாட்டப்பட்டன. இந்த நெடிய போராட்டத்தில் 15 பேர் தங்கள் இன்னுயிர்களை ஈந்தார்கள். ஈழத்தமிழ்ச் சமூகத்தின் முக்கியமான ஒரு சமூக மாற்றத்திற்காகப் பங்களித்த அவர்கள் எவர் பெயரும் பெரிதாக அறியப்பட்டதல்ல. அவர்களோ அந்தப் போராட்டமோ கொண்டாடப்பட்ட ஒன்றல்ல.

1966ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ம் திகதி 'சாதி அமைப்பு தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்' என்ற முழக்கத்துடன் தொடங்கிய தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் பல தடைகளையும் தாண்டி சில வெற்றிகளைப் பெற்றது. அதன் பலனையே இன்றுவரைத் தமிழ்ச் சமூகத்தின் ஒடுக்கப்பட்ட மக்கள் அனுபவிக்கிறார்கள். இந்தப் போராட்ட வரலாறு மிகவும் முக்கியமானது. அடுத்த தலைமுறையினர் அறிய வேண்டியது. இந்தப் போராட்ட அனுபவங்களின் தொகுப்பாக 'இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்' என்ற நூல் 1989ம் ஆண்டு வெளிவந்தது. மிகவிரிவான தகவல்களுடன் எழுதப்பட்ட அந்நூல் மேம்படுத்தப்பட்ட புதிய பதிப்பாக அண்மையில் வெளிவந்துள்ளது. குறிப்பாக போருக்குப் பிந்தைய சூழலில் சாதியம் பற்றிய குறிப்புகளையும் அது உள்ளடக்கியுள்ளமை முக்கியமானது. இற்றைக்கு 55 ஆண்டுகளுக்கு முன்னர் சாதியத்திற்கு எதிரான வீரம் செறிந்த போராட்டத்தின் கதையை அறிய விரும்புவோர் வாசிக்க வேண்டிய நூல்.

சாதியத்தின் தாக்கம் என்பது ஒடுக்கப்பட்ட சாதியினரின் பிரச்சினைகள் தான். ஆனால் அதற்கு எதிரான போராட்டங்களும் தீர்வுகளும் அவர்களுக்குரிய பிரத்தியேகமான நிகழ்ச்சி நிரலல்ல. சாதியம் என்பது இந்திய இலங்கைக்குரிய விஷேட சமூகக் கட்டுமானமாக நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ளது. அதிலும் இலங்கையின் சாதியக்கட்டமைப்பு இந்தியக் கட்டமைப்பிலும் வேறுபட்டதாகும். இலங்கையிலும் வடக்கு, சாதியமைப்பு கிழக்கிலிருந்து வேறுபட்டதாவதுடன் சிங்கள மலையகத்தமிழ் மக்களிடமும் முஸ்லிம்களிடமும் வித்தியாச வித்தியாசமான சாதியமுறை இருப்பதை அவதானிக்க முடியும். ஆனால் ஒடுக்கப்படும் சாதிகளும் ஒடுக்கும் சாதிகளின் ஆதிக்கம் அரசியலிலும், பொருளாதார சமூகப் பண்பாட்டு அம்சங்களிலும் நிறுவனப்படுத்தப்பட்டுள்ளமை பொதுவான அம்சமாகும். சாதிய மறுப்பே இன்றும் யாழ்மைய உயர்சாதியினரின் ஆயுதமாக இருக்கிறது. இது சமூக நிறுவனங்களில், பாடசாலைகளில், கோயில்களில், பல்கலைக்கழகத்தில் என அனைத்திலும் வெளிப்படையாகச் செயற்படுகிறது. சுதியத்தை யாரெல்லாம் தூக்கிப் பிடித்தார்களோ அவர்களே கொண்டாடப்படுகிறார்கள். பொன்னம்பலம் இராமநாதனைப் போற்றிப் புகழுவோர் அவரது தம்பியான அருணாசலத்தைக் கவனிப்பதில்லை. காரணம் தனது சூழலையும் மீறிய வகையிலான சமூகச் சார்புக் கருத்துக்களை அருணாசலம் முன்வைத்திருந்தார். சமூகச் சார்பான முற்போக்கான பார்வை அவரிடமிருந்தது. இதனால் அவர் இருட்டடிப்புச் செய்யப்பட்டார்.

எஸ்.ஜே.வி. செல்வநாயகம் சாதியத்தை ஒழிக்கப் பாடுபட்டார் என்று கூறும் தமிழ்த் தேசியவாதிகள் அவரது காலத்தில் கண்ணெதிரே இடம் பெற்ற சாதிய எதிர்ப்புப் போராட்டங்கள் பற்றி வாயே திறப்பதில்லை. சாதியம் இழிவாகவும் ஒடுக்கு முறையாகவும் இருப்பதையிட்டுத் தமிழ்த் தேசியவாதிகளுக்கு பிரச்சினை இல்லை. அதனை அம்பலப் படுத்துவதும் எதிர்த்துப் போராடுவதும் தான் அவர்கட்குப் பிரச்சினையாகிறது. வட்டுக்கோட்டையில் ஒரு சாதியினருக்கு எதிராக அரங்கேறிய வன்முறை எந்தவொரு பிரதான செய்தி ஊடகமும் அறிக்கையிடவில்லை. எல்லா இடங்களிலும் இந்த வன்முறை இருட்டடிப்புச் செய்யப்பட்டது. புறஒடுக்குமுறை பற்றி உச்சஸ்தாயில் சுத்தவும் உணர்ச்சிவசப்படவும் தெரிந்தவர்களுக்கு அகஒடுக்குமுறைகள் பற்றி எந்தவொரு அக்கறையும் இல்லை. பாராளுமன்ற ஆசனங்களைக் கொண்டுள்ள தமிழ்க்கட்சிகள் எதுவும் இந்த நிகழ்வைப் பற்றி வாய்திறக்கவோ கண்டிக்கவோ இல்லை. எங்கள் அரசியலின் யோக்கிதை இவ்வாறுதான் இருக்கிறது.

இன்று தமிழ் சமூகத்தில் குறிப்பாகவும் இலங்கையில் சாதியமானது, அரசியல் சமூக ஜனநாயகத்தை நிலை நாட்டவும், சமத்துவத்தையும் சமூக நீதியையும் நிலைநாட்டுவதற்கும் முட்டுக்கட்டையாகவே இருந்து வருகிறது. இதனால் சமகால ஏற்றத்தாழ்வான சூழ்நிலையில் ஜனநாயகத்திற்காகவும் சமூக நீதிக்காகவும் சமத்துவத்திற்குமான போராட்டங்களில் சாதியத்திற்கு எதிரான போராட்டமும் முக்கியமாகிறது. அதேபோன்று சாதியத்தின் பாதிப்புகளுக்கு தீர்வுகளை காண்பதற்கான தேவையை பொருட்படுத்தாமலும் தற்கால சமூக அசைவியக்கம் நடைபெறமுடியாது. இது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு பிரதானமானது.

தமிழ் தேசிய விடுதலைப்போராட்டம் என்ற பொதுவான கோஷத்துக்குள் சாதியம் முற்றாக தகர்க்கப்படாது மறைக்கப்படுகிறது அல்லது மறைந்து கொண்டுள்ளது. பொதுவாக தேசிய அரசிற்கான அல்லது சுயாட்சிக்கான போராட்டம் என்பதனால் மட்டும் அதற்கு சாதியத்தை தகர்க்கும் வலிமை வந்து விடுவதில்லை. ஏனெனில் தேசிய அரச அதிகாரம் காலனித்துவ, ஏகாதிபத்திய அதிகாரம் ஏகாதிபத்திய உலகமயமாதலின் ஆதிக்கம் வேறுவேறு விதங்களில் சாதிய சமூகக்கட்டமைப்பை உள்வாங்கிக் கொள்கின்றன. சமூக மாற்றத்திற்கான தேசிய விடுதலைப் போராட்டங்களே உண்மையான சாதியத் தகர்ப்பைக் கொண்டிருக்க முடியும். அதற்கான கொள்கை நடைமுறைகளே வெறும் சுலோகங்களையும் வார்த்தைகளையும் விட அர்த்தம் நிறைந்ததாகும். போராட்டங்களின் பொதுவான போக்கும் எதிர்பார்ப்பும் ஆயுத நடவடிக்கைகளும் சாதியமைப்பை வலுக்குறைந்துள்ளதாகத் தோன்றினாலும் அது உண்மையல்ல என்பதை நாம் இன்று நடைமுறையில் காண்கிறோம்.

போருக்குப் பிந்தைய சூழலில் முனைப்படைந்துள்ள சாதிய ஒடுக்குமுறையின் அண்மைய உதாரணமே வட்டுக்கோட்டையில் நடந்தவை. இச்சம்பவம் நிகழ்ந்து ஒரு மாதத்திற்கும் மேலாகிறது. இவ்வன்முறையில் ஈடுபட்டவர்கள் இன்றுவரைக் கைதுசெய்யப்படவில்லை. தொடர்ந்தும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. அகஒடுக்குமுறைகளில் தொடர்ச்சியாக ஈடுபடும் சமூகம் புறஒடுக்குமுறைகள் பற்றிப் பேசுவதற்கு இலாயக்கற்றது. அகஒடுக்குமுறைகளைத் தொடரும், நியாயப்படுத்தும், ஊக்குவிக்கும் ஒரு சமூகத்தின் விடுதலை என்றென்றைக்கும் சாத்தியமாகாது.

## கடிதங்கள்

### துறைநீலாவணை வீதியில் குப்பைகள் வீசுவதை நிறுத்தவும்

துறைநீலாவணைக்குச் செல்லும் பிரதான வீதியோரத்தில் வீட்டுக்கழிவுகள், கடைக்கழிவுகள், கோழிக்கழிவுகள் வீசப்படுவதாக, துறைநீலாவணை பொதுமக்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட துறைநீலாவணை கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதியோரத்தில், அடையாளம் தெரியாத நபர்களும் சில ஓட்டோக்காரர்களும் காலை, இரவு வேளைகளில் குப்பைகளையும் கழிவுகளையும் வீசிவிட்டு செல்கின்றார்கள்.

இதனால் துறைநீலாவணைக்குச் செல்லும் வீதியோரம், மோசமான நிலையில் காணப்படுகிறது. பழுதடைந்த கோழிக்கழிவுகளை தெருநாய்கள், காகங்கள் எடுத்துச் செல்வதால், வீதியில் பயணிக்கும் பொதுமக்கள் அசௌரியங்களுக்கு உள்ளாகிறாங்கள்.

களுதாவளை பிரதேச சபையால், 'இவ்விடத்தில் குப்பைகள் போட வேண்டாம்' எனப் பெயர்ப்பலகை காட்சிப்படுத்தப்பட்ட நிலையில் அதைப் பொருட்படுத்தாது, அந்த இடத்தில் குப்பைகளை வீசிவிட்டுச் செல்கின்றார்கள்.

இவ்விடத்திலிருந்து, 100 மீற்றர் அண்மையில் விசேட அதிரடிப்படை முகாம் இருந்தும், படையினரைப் பொருட்படுத்தாது, சூழலை மாசுபடுத்தும் வகையில் குப்பைகள் வீசப்படுகிறது.

திருநெல்வேலி

ஜவாஹிருல்லா, அப்துல்சமது

# பதவிகளுக்கு சிக்கல்

திருச்சி, தென்னூரை சேர்ந்த அப்துல்ஹக்கீம், சென்னை சிட்டி சிவில் 15ஆவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், கூறப்பட்டுள்ளதாவது: மனித நேய மக்கள் கட்சியின் விதிமுறை 6ஆவது பிரிவின்படி வேறு கட்சி உறுப்பினர்கள், ம.ம.க.,வில் உறுப்பினராக முடியாது. 23வது பிரிவின்படி, ம.ம.க.,தனி சின்னத்தில் போட்டியிடலாமே தவிர மற்ற கட்சி சின்னங்களில் போட்டியிட கூடாது என உள்ளது.



மனித நேய மக்கள் கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லா 61, பொதுச்செயலாளர் அப்துல்சமது 52 ஆகியோர் கடந்த சட்டசபை தேர்தலில் முறையே பாபநாசம், மணப்பாறை தொகுதிகளில்திராவிட முன்னேற்ற கழகத்தின் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றனர்.

கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லா, பொதுச்செயலாளர் அப்துல்சமது ஆகியோர் தேர்தல் ஆணையத்தில் தாக்கல் செய்த விண்ணப்பத்தில் தங்களை தி.மு.க.,உறுப்பினர்கள் என தெரிவித்து, அக்கட்சி சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ளனர். எனவே அவர்கள் மனித நேய மக்கள் கட்சியில் அடிப்படை உறுப்பினராக தொடர கூடாது என வழக்கு தொடர்ந்திருந்தார்.

வழக்கு நேற்று வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதிக்கு தள்ளி வைக்கப்பட்டது.

இருவரும் தி.மு.க.,எம்.எல்.ஏ.,க்களாக தொடரும் பட்சத்தில் ம.ம.க., உறுப்பினராகவோ, தலைவர், பொதுச்செயலாளர் பொறுப்புகளில் தொடரமுடியாது. கட்சியில் இருப்பதாக தெரிவித்தால் எம்.எல்.ஏ.,பதவிகளை இழக்கவேண்டிவரும் நிலை ஏற்பட்டுள்ளது.



சென்னை

## தாய் - சேயை மீட்டவருக்கு வாழ்த்து

துணிச்சலை மட்டும் கைவிட்டு விடாதீர்கள் என்று வெள்ளத்தில் சிக்கிய தாய் - சேயை மீட்டவருக்குத் தொலைபேசி வாயிலாக கமல் பாராட்டு தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டத்தில் குற்றாலம் எனப்படும் அருவி, கல்வராயன் மலை அடிவாரத்தில் வனப்பகுதியில் அமைந்துள்ளது. இந்தச் சுற்றுலாத் தலத்துக்கு சேலம் மாவட்டத்தைச் சுற்றியுள்ள மக்கள் அதிக எண்ணிக்கையில் வந்து செல்வது வழக்கம்.

சில தினங்களுக்கு முன்பு வளிமண்டல மேலடுக்குச் சுழற்சி காரணமாக சேலம் மாவட்டத்தில் தினந்தோறும் ஆங்காங்கே மழையும், ஓரிரு இடங்களில் மிக கனமழையும் பெய்தது. இதனை ஆனைவாரி அருவியில் வழக்கத்தை விட அதிகமாக நீர் கொட்டியது.

அக்டோபர் 24ஆம் திகதி மாலையில் பலர் குளித்துக் கொண்டிருந்த நிலையில், செந்நிறத்தில் நீர் கொட்ட ஆரம்பித்தது. இதனைக் கவனித்த வனத்துறையினர், அருவியில் குளித்துக் கொண்டிருந்தவர்களை உடனடியாக வெளியேற அறிவுறுத்தினர்.

திடீரென வெள்ளம் பெருக்கெடுத்ததால், அருவியில் குளித்துக் கொண்டிருந்தவர்களில் குழந்தையுடன் இருந்த பெண் ஒருவர் உள்பட 5 பேர் அருவியின் மறு கரையில் ஒதுங்கினர். வெள்ளம் அதிகரித்ததால், அவர்களில் இருவர் அங்கிருந்த பாறை மீது ஏறிக் குழந்தை, பெண் ஆகியோரை மீட்டனர். மற்ற இருவர் பாறை மீது ஏற முயன்றபோது, தவறி வெள்ளித்தில் விழுந்தனர். சிறிது தூரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட இருவரும் சற்று தூரத்தில் கரை ஒதுங்கித் தப்பித்தனர்.

தஞ்சாவூர்

டிடிவி தினகரன் ஓபிஎஸ் தம்பி சந்திப்பு

## அரசியலில் பரபரப்பு



டிடிவி தினகரன் இல்லத் திருமண விழாவில் ஓபிஎஸ் தம்பி ஓ.ராஜா, தினகரனைச் சந்தித்துப் பேசியதை அடுத்து, அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட சசிகலா, மீண்டும் கட்சியில் இணைவதில் ஆர்வம் காட்டி வருகிறார். எனினும் இதற்கு அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

இதற்கிடையே எதிர்பாராதவிதமாக, ‘அரசியலில் யார் வேண்டுமானாலும் வரலாம். அதை ஏற்பதும், ஏற்காததும் மக்களின் முடிவு. அதிமுக தொண்டர்களின் இயக்கம். சசிகலாவைக் கட்சியில் சேர்ப்பது குறித்து, தலைமைக் கழக நிர்வாகிகள் ஆலோசித்து முடிவு எடுப்பார்கள்’ என்று ஓபிஎஸ் தெரிவித்தது பரபரப்பை ஏற்படுத்தியது.

இதற்கு முன்னாள் அமைச்சர்கள் ஜெயக்குமார், கே.பி. முனுசாமி ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், ஓபிஎஸ் ஆதரவு நிர்வாகிகள் தொடர் செய்தியாளர் சந்திப்பின் மூலம் ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஆதரவாகக் கருத்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

பெங்களூர்

நிதி எவ்வளவு என்று

## பொம்மையால் சொல்ல முடியுமா?



பாரதிய ஜனதா ஆட்சியில் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்று முதலமைச்சர் பசவராஜ் பொம்மையால் சொல்ல முடியுமா?

இவ்வாறு,விஜயாப்புரா மாவட்டம் சிந்தகியில் காங்கிரஸ் வேட்பாளரை ஆதரித்து பிரசாரம் செய்த எதிர்க் கட்சி தலைவர் சித்தராமையா தெரிவித்தார்.

‘நான் முதலமைச்சராக இருந்த போது எஸ்.டி. மற்றும் எஸ்.சி. சமுதாய மக்களுக்கு ஏராளமான நிதியை ஒதுக்கீடு செய்திருந்தேன். ஏழை மக்களுக்கு இலவசமாக 10 கிலோ அரிசி வழங்கினேன். அனைத்து சமுதாய மக்களின் வளர்ச்சிக்கும் நிதி ஒதுக்கினேன். மாநிலத்தில் பாரதிய ஜனதா ஆட்சிக்கு வந்தபின்பு எந்த ஒரு வளர்ச்சி பணிகளும் நடைபெறவில்லை. காங்கிரஸ் ஆட்சியில் எஸ்.டி மற்றும் எஸ்.சி. சமுதாயங்களுக்கு எத்தனை கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.

இந்த விவகாரம் பற்றி ஒரே மேடையில் என்னுடன் விவாதம் நடத்த பசவராஜ் பொம்மை தயாரா?. ஜனதாதளம் (எஸ்) கட்சி மதசார்பற்றது என்று சொல்கிறார்கள். இடைத்தேர்தலில் காங்கிரஸை தோற்கடிக்க பாரதிய ஜனதாவுடன் கைகோர்த்து, 2 தொகுதிகளிலும் முஸ்லிம் வேட்பாளர்களை ஜனதாதளம் (எஸ்) கட்சி நிறுத்தி உள்ளது. இவ்வாறு கைகோர்த்து செயல்படுவதன் மூலம் பா.ஜனதாவுக்கும், ஜனதாதளம் (எஸ்) கட்சிக்கும் எந்த வேறுபாடும் இல்லை.இவ்வாறு சித்தராமையா பேசினார்.

திருப்பத்தூர்

## வரதட்சணை பிரச்சினை; நிறுத்தப்பட்டது திருமணம்

புதுச்சேரி,

வரதட்சணை கேட்டு திருமணத்தை நிறுத்திய அண்ணன், தம்பிக்கு ஓராண்டு சிறை தண்டனை விதித்து புதுச்சேரி கோர்ட்டு தீர்ப்பளித்தது. புதுவை உழவர்கரை பகுதியை சேர்ந்தவருக்கும், அதே பகுதியைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கும் கடந்த 2012ஆம் ஆண்டு திருமணம் நிச்சயம் செய்யப்பட்டது.

இதற்கிடையே மணமகன் வீட்டார் தரப்பில்,மனமகனுக்கு பிரெஞ்சு குடியுரிமை கிடைக்க இருப்பதாக கூறி பெண் வீட்டாரிடம் கூடுதல் வரதட்சனை மற்றும் நகைகளை கேட்டுள்ளனர். ஆனால் அதனை பெண் வீட்டார் கொடுக்க முடியாததால் திருமணத்தை மணமகன் வீட்டார் நிறுத்திவிட்டனர்.

இதுகுறித்து பெண்ணின் உறவினர் வில்லியனூர் அனைத்து மகளிர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் கணவன் , அவரது அண்ணன் நாகராஜ் ஆகியோர் மீது வரதட்சணை உள்ளிட்ட 2 பிரிவுகளின் கீழ் பொலிஸில் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கு விசாரணை புதுச்சேரி தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

புதுச்சேரி

## மனைவியை கொன்றவருக்கு ஆயுள் தண்டனை

கையடக்கபேசியில் நண்பர்களுடன் பேசியதால் நடத்தையில் சந்தேகப்பட்டு மனைவியை கழுத்தை நெரித்து கொலை செய்த கணவனுக்கு ஆயுள் தண்டனை விதித்து புதுவை நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

கடலூர் மாவட்டம் சின்ன பகண்டை கிராமத்தைச் சேர்ந்த இவர் கடந்த 2008ஆம் ஆண்டு மும்பையில் பணியாற்றியபோது, தன்னுடன் பணியாற்றிய மும்பையை சேர்ந்த பெண்ணை காதலித்து திருமணம் செய்து கொண்டார். அவர்கள் கடந்த 2013ஆம் ஆண்டு புதுச்சேரி தர்மாபுரி தனகோடி நகர் முதல் குறுக்கு தெருவில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து குடியேறினர். இவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை உள்ளது.

இந்த நிலையில் கிராமத்தில் உள்ள தனியார் கம்பெனியில் வேலை செய்து வந்தார். வீட்டில் இருந்த ஜெர்சி பிரின்ஸ்லா தனது நண்பர்களுடன் கையடக்கபேசியில் பேசியதாக தெரிகிறது. இதனால் அவரது நடத்தையில் சந்தேகப்பட்டார். இதன் காரணமாக கணவன்-மனைவிக்கு இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது.

இந்த நிலையில் 3.12.2015 அன்று ஏற்பட்ட தகராறில் மனைவியை கணவன் கழுத்தை நெரித்து கொலை செய்தார். இது தொடர்பாக புதுச்சேரி மேட்டுப்பாளையம் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.





## வேலைத்திட்டம்...

சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களில் மாற்றுத் திறனாளிகளான இராணுவ வீரர்களுக்கு செயற்கை கால்களை பெற்று கொடுக்கும் வேலைத்திட்டம் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் 26ஆம் திகதி சப்ரகமுவ மாகாண சபை கட்டிடத்தொகுதியில் இடம்பெற்றது. (சிவாணி ஸ்ரீ)





## பார்வையிட்டார்...

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சினூடாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் மேற்பார்வையில் புனரமைக்கப்பட்டுவரும், வலப்பனை -ரிலாமுல்ல ஆரம்ப பாடசாலையின் புனரமைப்பு பணிகளை இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் பார்வையிட்டார். (கேதீஸ்)

## காஷ்மீர் கறுப்பு தினத்தில்...







காஷ்மீர் கருப்பு தினத்தை முன்னிட்டு, ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்புக் காரியாலயத்துக்கு முன்னால் பதாதைகளை ஏந்திக்கொண்டு, முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பினர், நேற்று முன்தினம் (27) போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இடம்பெறும் அட்டூழியங்களையும், அப்பாவி காஷ்மீரிகளை மனிதாபிமான மற்ற முறையில் ஆக்கிரமிப்புப் படைகள் நடத்துவதையும் இவர்கள் தமது பதாதைகளில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையும் ஐ.நா. மனித உரிமை அமைப்பும் இவ்விடயத்தில் தலையிட்டு, இரு நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகளைத் தீர்த்து வைக்க வேண்டுமென போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இதன்போது வலியுறுத்தினர்.

(படங்கள் - நூருல் ஹுதா உமர்







## திறப்பு...

சாய்ந்தமருது பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் 50ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு, சாய்ந்தமருது பல்நோக்கு கூட்டுறவுச் சங்க கட்டடத்தில், புதிய பல்பொருள் விற்பனை நிலையமொன்று, நேற்று (28) திறந்து வைக்கப்பட்டது.

சாய்ந்தமருது பல்நோக்கு கூட்டுறவுச் சங்க நிர்வாகத் தலைவர் எம்.எம்.உதுமா லெப்பையின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி பிரதம விருந்தினராக கலந்துகொண்டு, பல்நோக்கு கூட்டுறவுச் சங்க கட்டடத்தை திறந்து வைத்தார்.

(படங்கள் - நூருள் ஹுதா உமர், எம்.என்.எம். அப்ராஸ்)

## பழைய விலையில் பால்மா; மக்கள் முண்டியடிப்பு





கிழக்கு மாகாண மக்களுக்கென 2 கோடி ரூபாய்க்கு பால்மா கொள்வனவு செய்யப்பட்டு, சகல கூட்டுறவுச் சங்கங்களினூடாக விநியோகிக்க கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எ.எல்.எம்.அஸ்மியின் நடவடிக்கை எடுத்திருந்தார்.

அதன்படி, 400 கிராம் பால்மா 380 ரூபாய்க்கு (400 கிராம் பால்மாவின் புதிய விலை 480 ரூபாய் ஆகும்) விநியோகிக்கப்பட்டு வருகிறது.

அதன்படி, காரைதீவு ப.நோ.கூ.சங்கத்துக்கு 1,340 பக்கெட் 400 கிராம் பால்மாவும், 53 பக்கெட் 1 கிலோகிராம் பால்மா பக்கெட்டும் கொள்வனவு செய்ததாக அச்சங்கத் தலைவர் வை.கோபிகாந் தெரிவித்தார்.

அத்தோடு, 3 கிலோகிராம் சீனி, 400 கிராம் அங்கர் பால்மா, 200 கிராம் தேயிலை, 1 உப்பு பக்கெட் அடங்கிய 1,000 ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொதியை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இது மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்றதுடன், இப்பொதியைப் பெற மக்கள் முண்டியடித்தனர்.

(படங்கள் - வி.ரி.சகாதேவராஜா)









ஸ்கொட்லாந்து

# பணத்தைத் தீயிட்டுக் கொளுத்தி இருவர் ஆர்ப்பாட்டம்

ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் எதிர் வரும் 31ஆம் திகதி பருவநிலை உச்சி மாநாடு நடத்தத் திட்டமிடப்பட்டு உள்ளது.

இந்நிலையில் இம் மாநாடு நடத்த திட்டமிட்டுள்ள அரங்கத்தின் முன் இரு போராட்டக்காரர்கள் பிரித்தானியப் பிரதமர் போரிஸ் ஜோன்சன் போன்று வேடமணிந்து பணத்தைத் தீயிட்டுக் கொளுத்தியும், காற்றில் பறக்க விட்டும், கோஷங்கள் எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பருவ நிலை மாற்றத்தில் எண்ணெய் நிறுவனங்களின் தொடர்பு குறித்தும் ஆலோசிக்க வேண்டியே அவர்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பிரேஸில்

# பிரேஸில் ஜனாதிபதி மீது வலுக்கும் குற்றச்சாட்டுக்கள்

உலக அளவில் கொரோனாத் தொற்றுப் பரவலால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக 2 ஆம் இடத்தில் பிரேஸில் உள்ளது.

அந்நாட்டில் இதுவரை 6 இலட்சத்துக்கும் அதிகமானோர் இத்தொற்றினால் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கொரோனாத் தொற்றுப் பரவலை மோசமாகக் கையாண்ட அந்நாட்டு ஜனாதிபதி ஜெய்ர் பொல்சொனாரோ ( Jair Bolsonaro) மீது குற்ற வழக்குபதிவு செய்யும் பரிந்துரையை பாராளுமன்ற உறுப்பினர் குழு கொண்டு வந்த நிலையில்

அதற்கான ஒப்புதலும்தற்போது வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் பாராளுமன்றக் குழுவின் 11 உறுப்பினர்களில் 7 பேர் இதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

எனினும் இப்பரிந்துரையை ஆய்வு செய்யும் நபரை ஜனாதிபதியே நியமிப்பார் என்பதால் இப் பரிந்துரையால் ஜனாதிபதி மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது குறித்து உறுதியாகக் கூறமுடியாதுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரேஸிலில்

# அதிகளவில் தேடப்படும் ஸ்குவிட் கேம் உடைகள்

உலகளவில் கோடிக்கணக்கான மக்களைக் கவர்ந்த இணையத் தொடராக நெட்ப்ளிக்ஸில் வெளியாகிய ஸ்குவிட் கேம் ( Squid Game) இணையத்தொடர் காணப்படுகின்றது.

இத் தொடரில் வரும் கதாப்பாத்திரங்கள் மற்றும் அவர்கள் அணியும் உடைகளும் தற்போது உலகம் முழுவதும் பிரபலமாகியுள்ளன.

மேற்குலக நாடுகளில் பயமுறுத்தும் வகையில் வேடமணிந்து கொண்டாடப்பட்டு வரும் ஹலோவின் திருவிழா நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில் இதற்காக பெரும்பாலானோர் ஸ்குவிட் கேமில் வரும் உடைகளைத் தேடியதாகத் தெரிய வந்துள்ளது.

இவ் உடைகள் அதிகாரபூர்வமான வெளியீட்டில் கிடைக்காவிட்டாலும் கூட சில ஒன்லைன் தளங்களில் அடையாளம் தெரியாத நிறுவனங்கள் இவற்றை விற்பதாகக் கூறப்படுகிறது.



இத்தாலி

# 'மனைவியிடம் இருந்து காப்பாற்றி என்னைச் சிறையில் அடையுங்கள்'

நபர் ஒருவர் தன்னை மனைவியிடம் இருந்து காப்பாற்றிச் சிறையில் அடைக்குமாறு பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ள விநோத சம்பவம் இத்தாலியில் இடம்பெற்றுள்ளது.

இத்தாலியின் ரோம் நகரை ஒட்டிய கைடோனியா மாண்டெசெலியோ எனும் நகரில் வசித்துவரும் 30 வயதான நபர் ஒருவரே இவ்வாறு பொலிஸ் நிலையதில் தெரிவித்துள்ளார்.

விசாரணையின் போது குறித்த நபர் போதைப் பொருள் தொடர்பான குற்றத்துக்காகப் பல மாதங்களாக வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

எனினும் , தண்டனைக் காலம் முடிவதற்கு மேலும் பல ஆண்டுகள் உள்ள நிலையில் வீட்டில் இருந்து திடீரென தப்பித்து பொலிஸ் நிலையத்துக்கு வந்த அவர் " இனிமேலும் என்னால் வீட்டில் இருக்க முடியாது, என்னுடைய மனைவியின் கொடுமையை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. வீடு எனக்கு நரகம் போல உள்ளது.

தயவு செய்து என்னைச் சிறையில் அடைத்து விடுங்கள் என்னுடைய தண்டனைக் காலத்தை நான் சிறையிலேயே கழிக்கிறேன்" எனக் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த நபரின் வேண்டுதலை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு அவரைச் சிறையில் அடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



வடகொரியா

# குறைவாக உண்ணுமாறு ஜனாதிபதி உத்தரவு

வடகொரியாவில் கடந்த ஆண்டு பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் பயிர்கள் பெருமளவில் சேதமடைந்ததாலும், விவசாயத் துறையானது போதுமான உற்பத்தியை நிறைவேற்றத் தவறியதாலும் அங்கு கடுமையான உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கொரோனாப் பரவல் காரணமாக அண்டைய நாடுகளின் எல்லைகளையும் வடகொரிய அரசு மூடியுள்ளதால் மக்கள் உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை பெறமுடியாமல் திணறி வருகின்றனர்.

இந்நிலையில் 2025ஆம் ஆண்டு வரை நாட்டு மக்களை குறைந்தளவு உண்ணுமாறு அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜொங் உன் உத்தரவிட்டுள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இது குறித்து உலக நாடுகள் தமது கண்டனங்களை தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நெதர்லாந்து

# படகாக மாறிய ரோபோ



நெதர்லாந்தில் ரோபோட் டாக்ஸி இயக்கப்பட்டு வரும் நிலையில் தற்போது ரோபோட் படகும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

மின்சாரத்தில் முற்றிலும் தானியங்கி முறையில் இயங்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ள இப் படகிற்கு Roboat என பெயரிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆம்ஸ்டர்டாம் நகர கால்வாயில் பரீட்சாத்த ஓட்டம் நடைபெற்ற நிலையில், விரைவில் பொது சேவைக்குக் கொண்டு வரப்படும் எனத் தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் பால் சேவை, வணிகப் போக்குவரத்து, பயணிகள் போக்குவரத்து உள்ளிட்ட பன்முகத் தன்மையில் இப்படகை இயக்கத் திட்டமிட்டுள்ளதாக அந் நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகக் கிண்ணத் தொடர்:

# ஸ்கொட்லாந்தை வென்ற நமீபியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு -20 உலகக் கிண்ணத் தொடரில், ஐக்கிய அரபு அமீரகத்தின் அபு தாபியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஸ்கொட்லாந்துடனான குழு இரண்டு சுப்பர் 12 போட்டியில் நமீபியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நமீபியா

ஸ்கொட்லாந்து: 109/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மிஷெல் லீஸ்க் 44 (27) ஓட்டங்கள். பந்துவீச்சு: ருபென் ட்ர்ம்பெல்மன் 3/17 [4], ஜான் பிரைலிங்க் 2/10 [4], ஜெ.ஜெ ஸ்மிட் 1/20 [4], டேவிட் விஸே 1/22 [4])

நமீபியா: 115/6 (19.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜெ.ஜெ. ஸ்மிட் ஆ.இ 32 (23) ஓட்டங்கள். பந்துவீச்சு: மிஷெல் லீஸ்க் 2/12 [2], பிரட் வேல் 1/14 [4], மார்க் வட் 1/22 [4], கிறிஸ் கிறீவ்ஸ் 1/22 [4], சஃபயான் ஷரிஃப் 1/21 [3.1])

போட்டியின் நாயகன்: ருபென் ட்ரம்பெல்மன்

இதேவேளை, மற்றைய குழு ஒன்று போட்டியில் பங்களாதேஷை இங்கிலாந்து வென்றிருந்தது.










முழந்தாளிட மறுத்தமை:

# மன்னிப்புக் கோரிய டி கொக்

தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில் முழந்தாளிடுமாறான பணிப்புரையை ஏற்க மறுத்து, மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான போட்டியில் கலந்து கொள்ளாத தென்னாபிரிக்காவின் முன்னாள் அணித்தலைவர் குயின்டன் டி கொக், சக அணி வீரர்களிடமும், இரசிகர்களிடமும் மன்னிப்புக் கோரியுள்ளார்.

தனது உரிமைகள் எடுக்கப்படுவதாக இருந்ததாலேயே தான் முழந்தாளிட மறுத்ததாக டி கொக் தெரிவித்துள்ளதுடன், தான் முழந்தாளிடுவதால் ஏனையோருக்கு உதவும் என்றால், அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் என்றால் தான் அதை மகிழ்வுடன் செய்வேன் எனக் கூறியுள்ளார்.

இறக்கக்கண்டி பிறீமியர் லீக்:

# சம்பியனானது சாஜஹான்

எப். முபாரக்



குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இறக்கக்கண்டி பிறீமியர் லீக் தொடரில் சாஜஹான் அணி சம்பியனாகியது.

அண்மையில் நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டிக்கு பிரதம அதிதிகளாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான எம். எஸ். தௌபீக், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜே.எம். லாஹிர் மற்றும் கிண்ணியா நகர சபை முன்னாள் தலைவர் ஹில்மி மஹ்ரூப் உட்பட பலரும் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்களை கையளித்தனர்.

எல்.பி.எல்:

# ஹஸரங்க உள்ளிட்டோரைத் தக்க வைத்த ஜஃப்னா கிங்ஸ்



லங்கா பிறீமியர் லீக்கின் (எல்.பி.எல்) ஜஃப்னா கிங்ஸ் அணியானது, கடந்த பருவகாலத்தில் ஜஃப்னா ஸ்டாலியன்ஸில் இருந்த அணித்தலைவர் திஸர பெரேரா, துடுப்பாட்டவீரர் அவிஷ்க பெர்ணான்டோ, சகலதுறைவீரர் வனிடு ஹஸரங்க, சுழற்பந்துவீச்சாளர் மகேஷ் தீக்ஷன ஆகியோரைத் தக்க வைத்துள்ளது.

இதில், சகலதுறைவீரரான பெரேராவை முதலே அணித்தலைவராக ஜஃப்னா கிங்ஸ் அறிவித்திருந்ததோடு, தென்னாபிரிக்காவின் முன்னாள் அணித்தலைவர் பப் டு பிளெஸி, பாகிஸ்தானின் வேகப்பந்துவீச்சாளர் வஹாப் றியாஸ் ஆகியோரையும் கைச்சாத்திட்டுள்ளதாக ஏற்கெனவே அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு மைதானத்தை விஸ்தரிக்குமாறு டக்ளஸுக்கு கடிதம்

பெரியகல்லாறு பொது விளையாட்டு மைதானத்தின் சரியான எல்லையை அளவை செய்து நிர்ணயித்தல், மைதானத்தின் கிழக்குப் புறத்தை விஸ்தரித்து எல்லைக் கட்டினை அமைத்தல், உள்ளிட்ட பல கோரிக்கை அடங்கிய கடிதம் ஒன்றை கல்லாறு மத்திய விளையாட்டுக் கழகம், பெரியகல்லாறு சர்வாத்த சித்திவிநாயகர் ஆலயத்துக்கு வருகைதந்த கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் நேற்று முன்தினம் கையளித்தனர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பிரதேசத்தில் பெரியகல்லாறு கிராமத்தில் எமது பொது விளையாட்டு மைதானம் அமைந்துள்ளது. இது சுமார் 50 வருடங்கள் வரலாறு கொண்ட பழைமை வாய்ந்த மைதானம் ஆகும். இந்த மைதானத்தை எமது கிராம விளையாட்டு கழகங்கள் பாடசாலை மாணவர்கள், முன்பள்ளி பாடசாலை மாணவர்கள், அயல்கிராம விளையாட்டு கழகங்கள், பிரதேச செயலகங்கள், மட்டக்களப்பு மாவட்ட கிரிக்கட் சம்மேளனம் ஆகிய அமைப்புகள் இந்தமைதானத்தினை பயன்படுத்தி பல்வேறு வகையான விளையாட்டு நிகழ்வுகளை நடாத்தி வருகின்றனர்.

எமது பெரியகல்லாறு பொதுவிளையாட்டு மைதானமானது வடக்கே நாகதம்பிரான் ஆலயத்தையும், கிழக்கே நீரோடையையும் தெற்கே அன்னைவேளாங்கன்னி வீதியினையும், மேற்கே நான்கு குடும்பங்களின் காணிகளினையும் எல்லையாக கொண்டு அமையப்பெற்றுள்ளது.

சிலர் உண்மைக்கு புறம்பான தகவல்களை வழங்கியதன் காரணமாக பெரியகல்லாறு பொது மைதானத்தில் கடின பந்து கிரிக்கட் விளையாடுவதற்கு மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையினால் தடை விதிக்கப்பட்டுள்ளது. தொடர்பான கடிதம் தவிசாளரின் கையொப்பத்துடன் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

பட்டிருப்பு தொகுதியில் கடினபந்து கிரிக்கட் விளையாடுகின்ற பாடசாலை மற்றும் கழகம் என்பன எமது கிராமத்தில் மாத்திரமே அமையப்பெற்றுள்ளது. கிட்டத்தட்ட 25 வருடத்திற்கு மேலாக கடினபந்து கிரிக்கட்டினை எமது பொது விளையாட்டு மைதானத்தின் விளையாடிக்கொண்டு வருகின்றோம். எமது பிரதேச கடினபந்து கிரிக்கட் விளையாட்டின் வளர்ச்சிக் கட்டத்தின் ஒரு அங்கமாக பெரியகல்லாறு மத்திய கல்லூரி அணியினருக்கும் மட்டக்களப்பு இந்துக் கல்லூரி அணியினருக்குமான "Battle of the Everest" என அறியப்படும் போட்டியினை இந்த மைதானத்திலேயே நடாத்தி வருகின்றோம். எமது மைதானமானது வடக்கு தெற்காக 128மீற்றரும், கிழக்கு மேற்காக 108மீற்றரும் ஆக போதியளவு இடவசதி உள்ள நிலையில் கடினபந்து கிரிக்கட்டினை விளையாட விடாமல் தடை செய்தமையினை, குறுகிய நோக்கம் கொண்ட சிலரின் சதி முயற்சியாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

இதனால் எமது பிரதேச கடினபந்து கிரிக்கட் வீரர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர். எனவே விளையாட்டினை நேசிக்கின்ற அமைச்சராக இருக்கின்ற நீங்கள் எங்கள் கவலையினை உணர்வீர்கள் என நாங்கள் உங்கள் மீது நம்பிக்கை கொள்கின்றோம். எனவே எமது பிரதேச ஒட்டுமொத்த இளைஞர்களின் தேவையாக இருக்கின்ற மைதான பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக மைதானத்தின் கிழக்குப்புறமாக காணப்படுகின்ற 30 அடி நீளமான கரையோர பாதுகாப்பு எல்லைக்குள் உட்பட்ட புதர்கள் நிறைந்த பள்ளமான நிலப்பகுதியினை செப்பநிட்டு மைதானத்துடன் இணைத்து தருமாறு தயவான கோரிக்கையினை முன் வைக்கின்றோம்" என உள்ளிட்ட பல கோரிக்கைகள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 29 ஒக்டோபர் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.